தென்மொழி

நாம் தமிழர்

# உலகத் தமிழினம் ஒன்றெனத் திரண்டது!

உரிமைகள் எழுந்தன !
கொள்கைகள் முழங்கின !
ஊமைக் கனவுகள் மழுங்கின ! — நில
வுருண்டையில் வளமைகள் விளைந்தன !
நரிமைகள் ஒடுங்கின !
நாய்மைகள் நடுங்கின !
நம்நிலம் புதுமையால் மலர்ந்தது ! — பொது
நலமிகும் உயிர்க்குலம் கிளர்ந்தது !

எண்ணங்கள் இணைந்தன !
எழுச்சிகள் முனைந்தன !
ஏழைகள் உழவர்கள் கூடினர் ! — பெரும்
ஏய்ப்பரை — மேய்ப்பரைச் சாடினர் !
பண்ணெலாம் உரிமைகள் !
பாட்டெலாம் விடுதலை !
பாட்டாளிக் கைகளின் எழுச்சிகள் ! — பார்
பாராளும் முதலைகள் வீழ்ச்சிகள் !

உலகத் தமிழினம்
ஒன்றெனத் திரண்டது !
உரமிகு கொள்கையை அமைத்தது ! — அதற்
குயிரெனும் செயல்முறை சமைத்தது !
கலகக் கொள்கைகள்
கலகலத் துதிர்ந்தன !
கவின்மிகு தமிழ்நிலம் மகிழ்ந்தது ! — அக்
காட்சியில் உலகெலாம் ஒளிர்ந்தது !

சுவடி : 18
ஓலை : 1
ஆசிரியர் பெருஞ்சித்திரனார்
விலை உருபா : 1-25

www.thamizham.net - Free E book No 7513

# நமக்கு வந்த மடல்கள்.

**0 : 862 :** பாவலர் வேந்தே, வணக்கம்! பண்ணாராய்ச்சிப் பேரறிஞர் உயர்திரு. ப. சுந்தரேசனார் அவர்கள் இயற்கை எய்தியது தமிழின இயக்கத்தின்மீது வீழ்ந்த இரண்டாவது பேரிடியாகும். அவர்கள் நுண்மாண் நுழைபுலமும் கல்வெட்டாய்வும் இலக்கண இலக்கியத் தெளிவும், செய்யுள் இயற்றும் திறனும், மெய்ப்பொருள் ஆய்வுத் திறனும், மிகச் சிறந்த நல்லொழுக்கமும் பண்பும் அமைந்த சான்றோர் ஆவார்கள். தம் வாணாள் முழுதும் முயன்று தமிழிசையே 'கர்நாடக சங்கீதம்' ஆயிற்று என்பதை இசையிலக்கணப் பேரறிவால் ஐயந் திரிபற நிலைநாட்டியவர்கள். ஐயாவின் ஆராய்ச்சியில் காணப்படும் உண்மைகளைப் பிற இசையறிஞர்களால் புரிந்து கொள்ளக்கூட முடிவதில்லையாம். பிற இசைப் புலவர் எல்லாம் பதினாறு அல்லது பதினெழு பண்களுக்குமேல் தெரியாதவராம். 103 பண்களையும் உணர்ந்தவர் ப. சுந்தரேசனார்!" அவர்களே ஆம். இவர்கள்தம் ஆராய்ச்சியின் முன் நிற்றலாற்றா ஆரிய அடிவருடிகள் சுந்தரேசனார் அவர்கட்கு ஒல்லும் வகையெல்லாம் இடர்புரிந்து, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினின்றும் வெளியேறச் செய்தனர்.

செங்கை மதுவனார் அவர்கள் முயற்சியால் "அரிமளம் தமிழ் மன்றம்" ஐயா அவர்கட்கு மணிவிழாக் கொண்டாடியபோது நாடாப் பதிவான்-வானொலிப் பெட்டியும் பொற்கிழியும் அளித்துக், குன்றக் குடியடிகளார் தலைமையில் புதுகை மன்னர் கல்லூரி முதல்வர் திரு. மீனாட்சி சுந்தரேசனார் அவர்களால் "இசை ஞாயிறு" என்னும் பட்டமும் அளித்துச் சிறப்பிக்கப் பெற்றார்கள். ஐயாவைப் போன்ற இசையாராய்ச்சிப் பேரறிஞர் இனித் தோன்றலரிது. அவர்களின் அருமையறிந்து மதுரைப் பல்கலைக் கழகம் யாழ் நூல் ஆய்வுப் பணியமர்த்தம் செய்தும், தமிழினத்தின் போதாக் காலம் ஆய்வு முடியு முன் வாழ்வு முடிந்தது. தம்மையும் கட்சியினரையும் காப்பாற்றிக் கொள்ளவே அரசுக் கட்டிலேறிய கலைஞர், மா. கோ. இரா. அரசுகள் செய்தக்கன செய்யாது போயின. இனியேனும் ஐயாவின் ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தொகுத்து அச்சிட்டு வெளிப்படுத்தியும் அவர் இல்லத்தை நினைவு நிலையமாக்கியும், அவர் வழியில் முயல்வார்க்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்குமா? — **வை. வீராண்டான், அரிமளம்.**

**0 : 863 :** அன்புசால் அறிஞர், பாவலரேறு ஐயாவுக்கு, வணக்கம். தமிழ்சான்றோராகிய நீவிர் என்னை மனையறம் புகுத்தி வைத்தமையால் நான் பெருமகிழ்வுடன் வாழ்கிறேன். தங்களது சொற்பொழிவு, இங்குள்ள மக்களை விழிப்படையச் செய்துள்ளது. எல்லோரும் தங்களது அறிவாற்றலை எண்ணி வியப்பிலாழ்ந்துள்ளனர். தாங்கள் மேற்கொண்டுள்ள 'உலகத் தமிழின முன்னேற்றக் கழக' முயற்சி எல்லாம் வல்ல இறையாற்றலால் வெற்றியுடன் இனிதே நிறைவேற வாழ்த்துகிறேன். தாங்கள் எல்லா நலமும் பெற்று வாழ வேண்டுகிறேன்.

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

www.thamizham.net - Free E book No 7513

# வலிய ஓர் இயக்கம் செய்வோம் - அதன் வளர்ச்சிக்குக் கைகொடுப்போம்!

வாருங்கள் தமிழர்களே! — நம்
வாழ்வைச் சமைத்திட,
தாழ்வை அகற்றிட,
வழி ஒன்று கண்டிடுவோம்! — நம்
இழிவுகள் போக்கிடுவோம்!

வாருங்கள் அறிஞர்களே! — நம்
வண்தமிழ் காத்திட,
செந்தமிழ் போற்றிட,
வகையினை ஆய்ந்திடுவோம்! — அதை
வையம் பரப்பிடுவோம்!

வாருங்கள் தோழர்களே! — கொடும்
வறுமை இலாதொரு
பொதுமை அமைப்பினை
வடித்திட நாம் இணைவோம்! — புதுக்
குடித்தனம் நாம் அமைப்போம்!

வாருங்கள் இளைஞர்களே! — நல்ல
வாய்மையும் நேர்மையும்
தூய்மையும் அரசியல்
வரம்பென்று கூவிடுவோம்! — அதைத்
திறங்கொண்டு கட்டமைப்போம்!

வாருங்கள் தாய்க்குலத்தீர்! — தீய
வன்மையும் கொடுமையும்
புன்மையும் அற்றொரு
வளமை இனம் படைப்போம்! — அதற்
கிளமை மனம் கொடுப்போம்!

வாருங்கள் கலைஞர்களே! — இழி
வழுக்கலும் இழுக்கலும்
அழுக்கும் இலாமலே
வளர்கலை நாம் சமைப்போம்! — பண்பு
வளமைக்குத் துணையிருப்போம்!


வாருங்கள் நண்பர்களே! — உங்கள்
வாழ்த்தினைக் கூறுங்கள்!
வல்லமை தாருங்கள்!
வலிய ஓர் இயக்கம் செய்வோம்! — அதன்
வளர்ச்சிக்குக் கைகொடுப்போம்!

www.thamizham.net - Free E book No 7513



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[ நிறுவனம் தி. பி. 1990 (1959) ]



# தென்மொழி

மொழி—இனம்—நாடு.

**நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!**

*இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.*

---

பொறுப்பாசிரியர்: **பெருஞ்சித்திரனார்**

புரப்பாசிரியர்கள்: தென்மொழி முலைவாணன் (சிங்கை), தென்மொழி மறை. நித்தலின்பனார், தென்மொழி ந. முத்துக் குமரனார். அமைச்சர்: அழ. இளமுருகன், அறி. இ.

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.)

சுவடி : 18] தி.பி.உ0கஉ மடங்கல்(ஆகத்து-செப்-'81)[ஓலை : 1

---

# உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் - தொடக்க மாநாடு



உலகில் இன்று பரந்துபட்டு வாழும் இரண்டு பழம் பேரினங்களில் தமிழினமும் ஒன்று. மற்றொன்று சீன இனம். உலகில் இன்று வாழும் தமிழின மக்களின் மொத்த மதிப்பீடு ஏறத்தாழ பதினேழு கோடியாகும். சீன நாட்டில் 'சீ-மோ-லோ' (Tchi-mo-Lo) என்றமொழி பேசும் தமிழின மக்கள் ஏறத்தாழ நாலரைக் கோடியாகும் என்றும், பிரன்னீசு மலை நாடு, செருமனி, பிரான்சு, போர்ச்சுக்கல், இத்தாலி ஆகிய நாடுகளில் 'தாமோசர்' மொழி பேசும் தமிழின மக்கள் ஏறத்தாழ மூன்ற

www.thamizham.net - Free E book No 7513

ரைக் கோடிப் பேராகும் என்றும், எகிப்தில், 'தொமூர்' என்ற மொழி பேசும் தமிழின மக்கள் ஏறத்தாழ இரண்டரைக் கோடிப்பேர் என்றும் அறிஞர்கள் கூறுவர். சீ-மோ-லா, தாமோர், தொமூர் என்னும் பெயர்கள் **தமிழ்** என்னும் பெயரின் திரிபு மொழிகளாகும். தமிழ் என்னும் சொல் எங்ஙன் வேத ஆரியர்களிடை **த்ரமள்** என்று திரிக்கப் பெற்று, **த்ரமிளம், திரவிடம்** என உருமாறி வழங்கியதோ, அங்ஙனமே அச்சொல் பல்வேறு நாடுகளில் பலவேறு வடிவங்களாய்த் திரிபுற்றும், கலப்புற்றும், சிதைவுற்றும், மாறியும் வழங்குகின்றது. கிரேத்தா தீவில் **தெரமிலர்** என்றும், திபெத்தில் **திரமிலர்** என்றும் தமிழர் அழைக்கப் பெறுகின்றனர். மற்றும் தமிழ் மொழியும் தாமிட, தமூர், தாமாலி, தமார், தமிர், துமா, தொமிட, தெமிலிக், தாமூரி, தாமல் முதலிய பெயர்களாகப் பல்வேறு நாடுகளில் வழங்குகின்றன. மலேசியா, ஈழம், சிங்கப்பூர், அந்தமான், பர்மா, பிசி, பிரான்சு, இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா, முதலிய நாடுகளில் நகர்ப்புறங்களில், கலப்பில்லாமல், இங்கிருந்து பலவகைப் பணிகள் தொடர்பாகப் போய் வாழும் தமிழின மக்கள்தாம் தம்மைத் தமிழர்கள் என்றும், தாம் பேசும் தாய் மொழியைத் தமிழ் என்றும் சிதைவில்லாமல் கூறி வருகின்றனர். தமிழீழமாகிய யாழ்ப்பாணத்தில் வாழும் தமிழினமும் தமிழும், பெயரிலும் வழக்கிலும் திரிபில்லாமல் இருப்பதற்குக் காரணியம், அங்குத் தமிழர் நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பிருந்தே வாழ்ந்து வருவதுதான். மற்றபடி ஆத்திரேலியா, இந்தோனேசியா, மொரிசியசு முதலிய நாடுகளில் கூட தமிழினப் பெயரும் தமிழ் மொழிப் பெயரும் ஓரளவு சிதைந்தும் பெருவாரியாக வழக்கிழந்தும் போய் விட்டன. உலகில் தமிழினம் வாழும் வேறு நாடுகள் திபெத்து, பெலுச்சித்தானம், ஆபுகானித்தானம், மெக்சிகோ, கானு, கம்போடியா, சயாம், மார்த்தினிக்கு, மோரித்தீவு, பிரிட்டிசு கயானு, பிரஞ்சு கயானு, வட வியத்நாம், தென் வியத்நாம், ரியூனியன், அன்ரில்சு தீவு, நியு கலிட்டோனியா, குவைத்து,டிரினிடாட், ரொடீசியா,சூரினும்,தென்அமெரிக்கா, உகாண்டா, சப்பான், தென் ஆப்பிரிக்கா முதலியன. உலகில் ஏறத்தாழ நாற்பத்து நான்கு நாடுகளில் தமிழினம் வாழ்கிறது. அங்கெல்லாம் தமிழ்மொழி கலப்புற்றும், சிதைந்தும் திரிந்தும் வழங்கப் பெறுகிறது. சில நாடுகளில் தமிழினம் பழங்குடி மக்களாகவே வாழ்ந்து வருகின்றனர். சிலவிடங்களில் அவர்கள் திருந்திய மக்களாக, நாகரிகமுற்ற மக்களாக, ஆனல் பிரஞ்சு, ஆங்கிலம் முதலிய மொழிகள் பேசும் மக்களாக வாழ்கின்றனர். உருசிய நாட்டில் ஏறத்தாழ முப்பது இலக்கம் தமிழின மக்கள் வாழ்வதாகக் கணக்கிடப் பெற்றுள்ளது. அவர்கள் சி-மோ-லா என்னும் திரிந்த மொழியைப் பேசி வருகின்றனர் என்றும கூறப்பெறுகிறது. இவர்களன்றி அண்மைக் காலங்களில் உருசியா சென்று வாழும் தமிழ் மக்களும் ஒரு கணிசமான எண்ணிக்கை உடையவர்களே.

www.thamizham.net - Free E book No 7513

இவ்வாறு உலகில் உள்ள பல நாடுகளிலும் சிதர்ந்து வாழும் தமிழர்கள் ஆங்காங்குப் பெரும்பாலும் மூன்றாந்தர நாலாந்தர இன மக்களாகவும் அடிமைகளாகவும் கூலிவேலை செய்பவர்களுமாகவே வாழ்கின்றனர். மிகச் சில நாடுகளில் உள்ள மிகமிகச் சிலரே வணிகத்திலோ, தொழில்களிலோ ஈடுபட்டு ஒருவாறு நல்ல நிலையில் உள்ளனர். இனி, எங்கோ ஓரிருவரே ஆங்காங்குக் கல்வி முதலிய அறிவுத் துறைகளிலும் பங்கேற்றுப் பாடாற்றுகின்றனர். நம் அண்மையிலுள்ள இலங்கை வாழ் தமிழர்கள், அங்கேயே நிலையாக வாழ்ந்து வரும் குடிமக்களாயிருந்தும், ஆண்டு அரசு செலுத்தியவர் களாயிருந்தும், கடந்த கால அரசியல் கோளாறுகளால், இன்று, அங்குள்ள பெரும்பான்மைச் சிங்கள இனத்திடம் சிக்கிச் சீரழிகின்ற வர்களாகவும் தொடர்ந்து துன்பத்திலேயே மிதப்பவர்களாகவுமே வாழ்ந்து வருகின்றனர். வாழ்ந்து வருகின்றனர் என்பதை விட அழிந்து வருகின்றனர் என்று சொல்வதே இன்றைய நிலையில் மிகப் பொருந்துவதாகும். இன்னும், சிங்கை. மலேசியா, அந்தமான் பகுதிகளில் வாழ்கின்றவர்களுக்கும் பலவேறு அரசியல், பொரு ளியல், வாழ்வியல் சிக்கல்கள் இருந்தே வருகின்றன.

உலகத் தமிழர்களின் சூழல்கள் இவ்வாறிருக்க, இனி, இங்கு தாய்நிலம் என்று கருதப் பெறுகின்ற இத் தமிழ்நாட்டில் உள்ள தமிழர்களுக்கோ, உள்ளும் புறமும் பலவாறான தன்னழிவுகளும், சீரழிவுகளும் இருந்து கொண்டே இருக்கின்றன. கடந்த மூவாயிர மாண்டுகளாகத் தமிழினம் தன் மொழியாலும் இனத்தாலும் பல்வேறு நாடோடி இனங்களுக்கு ஆட்பட்டு அடிமையெய்தி, இழிவுற்றும் அழிவுற்றும், உருமாறியும், திரிந்தும் வந்திருக்கின்றது. இந்திய நாடு விடுதலையுற்ற பின்பும் தமிழின அடிமைத்தளை நீங்காமல், ஒருவனிட மிருந்து விடுபட்ட கழுதை இன்னொருவனிடமும் மூட்டை சுமப்பது போல், வெள்ளைக்காரனிடமிருந்து விடுபட்ட தமிழினம், வடநாட்டு இந்திக்காரனிடமும் அடிமை யுற்றுக் கிடக்கிறது. ஏற்கனவே மொழி, இன, கலை, பண்பாட்டுத் துறைகளில் ஆரியத் தால் மிதிக்கப்பட்ட இவ் வேதுங்கெட்ட தமிழினம், இன்று அதே ஆரியரின் வழிமுறையினரான வடநாட்டு முரட்டினங்களால் அரசியல் துறையிலும் பொருளியல் துறையிலும் நசுக்கப்பட்டும், துவைக்கப்பட்டும் சிதைக்கப்பட்டும் வரவேண்டியுள்ளது.

இவ் வரலாற்று, நடைமுறை உண்மைகளை யெல்லாம் தெளி வாகப் புரிந்து கொண்டிருந்தும், இங்குள்ள வயிற்றுப் பிழைப்புத் தமிழர்களும், பதவிப்பொறுக்குத் தலைவர்களும், அரசியல் அதிகார நிலைகளில், தேசியம் என்ற பெயராலும், ஆட்சி என்ற பொன் விலங் காலும் ஏமாறியும், ஏமாற்றப்பட்டும், கட்டுண்டும் கருத்திழந்தும், துணிவற்ற கோழைகளாகவும் மோழைகளாகவுமே இருந்து வருகின்றனர். கடந்த காலத்தில் தந்தை பெரியார், அறிஞர்

www.thamizham.net - Free E book No 7513

அண்ணா, தலைவர் காமராசர் முதலிய குமுகாய அரசியல் தலைவர்களாலும் அறிஞர்கள் பிறராலும் தமிழின முன்னேற்றம் ஓரளவில் வரலாற்று விழிப்புணர்வு, அரசியல் பதவி அமர்வு, குமுகாயப் பொது நலப் பகிர்வு, கல்வி ஈடுபாடு, பொருளியல் மேம்பாடு முதலியவற்றில் ஒருவாறு தலையெடுத்திருந்தாலும், மற்ற உலக இனங்களை-மிகவும் பிந்தித் தோன்றிய இனங்களையும் கூட—ஒப்பிட்டு நோக்கு-கையில், இஃது இன்னும் மிகு தொலைவு போக வேண்டியுள்ள ஓர் இனமாகவே உள்ளது. பல படி நிலைகளை எட்ட வேண்டியுள்ள இனமாகவே உள்ளது. இந் நிலைகளையெல்லாம் தம் அறியாமை காரணமாகவோ, அடிமைத்தனம் காரணமாகவோ வாழ்வியல் நசைகளின் பொருட்டோ, முற்றும் உணராமலும், உணர்ந்தாலும் உணராதது போலும் இருக்கின்றவர்களே இங்கு, நம் இன்றைய தலைவர்களாகவும் ஆட்சியிலிருப்பவர்களாகவும் அமர்ந்திருக்கின்றனர். இவற்றை ஆழ எண்ணிப் பார்க்கையில் ஒரு புறம் வெட்கமாகவும், நாக்கைப் பிடுங்கிக் கொள்ளும் அளவுக்கு மானக்கேடாகவும், மறுபுறம் அரத்தமெல்லாம் சுண்டிப்போகும் அளவிற்கு வருத்தமாகவும் மனக்கொதிப்பாகவும் இருக்கின்றது.

இஃதிவ்வாறிருக்க, இன்றுள்ள தமிழக ஆட்சி நிலைமையை நினைத்துப் பார்த்தால், இங்குள்ளவர்கள் செத்துப் போன சுண்டெலிக்கு வட்டமிடும் கழுகுகளைப் போல, வடநாட்டு வல்லதிகார ஆட்சியின் கீழ் கிடக்கும் பதவி நாற்காலிக்குப் போட்டி போடுகின்றவர்களாகவே இருக்கின்றார்கள். ஒருவர்க்காகிலும் தன்மான உணர்ச்சியோ, இனமான எழுச்சியோ இல்லாமலிருப்பது மிகவும் வருந்தத் தக்கதாய் இருக்கின்றது. வடநாட்டு எடுபிடிகளின் கீழ் நின்று அடிமைகளைக் கட்டி மேய்க்கும் வல்லடிமை அதிகாரத்திற்காக இவர்கள் போட்டுக் கொள்ளும் குடுமிபிடிச் சண்டைகளைப் பார்த்தால், இவர்கள் இன்னும் ஏழேழு தலைமுறைகளிலும் தமிழின முன்னேற்ற நினைவு கொள்ளவே மாட்டார்களோ என எண்ண வேண்டியுள்ளது. இவர்களின் மக்கட் பற்றற்ற செயல்கள், அதிகார மமதைப் பேச்சுகள், ஒருவரை ஒருவர் சாடிக் கொள்ளும் இழிவு தோய்ந்த சொற்கள், ஒருவர் மேல் ஒருவர் பூதக் கண்ணாடி வைத்துக் கண்டுபிடித்துக் குற்றஞ்சாட்டுகின்ற மனப் போக்குகள் — காட்டிக் கொடுக்கும் கயமைப் பாடுகள் — இவை எல்லா நிலைகளிலும் ஒருவரினும் ஒருவர் விஞ்சி நிற்கும் தலைமை மேம்பாடுகள்! அப்பப்பா! இவர்களின் விளம்பர வேட்கைகள்தாம் என்ன! ஆடம்பர சொகுசு நலன்கள்தாம் எவ்வளவு! ஏழை மக்கள் மேல் ஏதோ இவர்கள் கரிசனம் காட்டுவது போலும் எழுத்துகள், காட்சிகள்தாம் என்னென்ன! அத்தனையும் ஏமாற்றுகள்! திருட்டுகள் அரசியல் எத்துகள்! தகிடு தத்தங்கள்! நெய்வடியும் உரைகள்! நெஞ்சில் கறைகள்! மொத்தத்தில் நம்மையே நாம் தாழ்த்திக்

www.thamizham.net - Free E book No 7513

கொள்ளும் இழி நிலைகள்! நம்மவர்களையே நாம் சுரண்டிக் கொழுக்கும் வஞ்சகங்கள்! இப்படிப்பட்ட சூழல்களைப் பார்த்துப் பார்த்துக், கேட்டுக் கேட்டுக் கண்ணீர் வடிக்கின்ற நெஞ்சங்களாய், கல்லாகிப் போன உடலங்களாய் நல்லவர்கள் நாணி நடுங்குகின்ற நிலையே இன்றைய தமிழகத்தின் நிலை!

இங்குள்ள பொருளியல் வேறுபாடுகளோ அவற்றின் ஏற்றத் தாழ்வுகளோ அல்லது மேடுபள்ளங்களோ சொல்லித் தீராதவை; அளந்து முடியாதவை. சோற்றைக் கண்டால் குமட்டுகின்ற நிலை ஒரு புறம்! சோற்றைக் காணுமலே அள்ளி விழுங்குகின்ற அங்காப்பு ஒரு புறம்! பள பளப்பும் பட்டும் உடலில் நழுவி விழப் பாம்பு போலத் தெளியும் வாளிப்பு உடல்கள் ஒரு புறம். பனியில் குளிர்ந்தும், வெயிலில் கறுத்து வெடிப் பேறியும், ஒளி மழுங்கிப் பாறையாய்ச் சொர சொரக்கும் திறங்கிய உடல்கள் ஒரு புறம்! இவற்றுக் கிடையில் அடித்தது கொள்ளை, வடித்தது வாழ்க்கை என்றெண்ணும் ஆட்சி அதிகாரிகள்! காவலாகள்! படைகள்—இந்நிலைகள் எல்லாம் சரிப்படுவது என்றைக்கு!

இவ்வளவுக்கும் இடையில் காமஞ்சொட்டும் கலைகள்! காட்சிகள்! வீட்டிலுள்ள பெட்டைச்சிகளை விட்டு வண்டை வண்டையாய்க் கதைகள் எழுதி, விழுந்து விழுந்து நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு படிக்கும் பாலுணர்வுப் பிண்டங்கள்! காமத்தால் பிசையப் பட்ட தசையுடம்புகள்! 'எங்கெங்குக் காணினும் சக்தியடா' (!) என்னும் பாவேந்தர் பாட்டை உருவமாய்ச் சமைத்ததுபோல், படங்கள், திரைப்பட ஆடல் பாடல்கள்! ஐயகோ! மக்கள் இனத்தின் அறிவு மேம்பாடுகள், மனத்தின் அச்சு அடையாளங்கள் இவை தாமா! காமந்தான் கலையா? களியாட்டந்தான் வாழ்க்கையா? இழிசுவைதான் இன்பமா? விலங்குகளுக்கும் வெறுப்பளிக்கும் ஆண் பெண் தசையெழுச்சிகளும் உராய்வுகளுந்தாம் மக்களினத்தின் கொடுமுடிக் கண்டுபிடிப்புகளா? கலை வெளிப்பாடுகளா! அட, இருபதாம் நூற்றாண்டு ஆண் பெண் எழுத்தாளர்களே! உங்களுக்கு உணவு போகும் வாயும் மலங்கழியும் வாயும் ஒன்று? இரண்டாலும் ஒரே உணர்வை வெளிப்படுத்தலாமா? ஒரு மண் புழுவுக்குள்ள வாழ்க்கை முறைப்பாடுதாறு மக்களுக்கும்! உடல் பரப்பில் நீங்கள் எண்ணியது தொளைகளை மட்டுந்தாமா? அல்லது மேடுகளை மட்டுந் தாமா? அதில் புதைக்கப்பட்டிருக்கும் மனம் எங்கே? அதன் உயர்ச்சிகளை நீங்கள் பார்த்த தில்லையா? தோல் இன்பம் ஒன்று தான் நீங்கள் அறிந்த இன்பமா? என்புதோல் போர்த்த உடம்புக்குள் அழியாத நல்லுணர்வுகளை நீங்கள் கண்டதில்லையா? — இத்தகைய கலை உணர்வுக் கொப்புளங்கள் சீழ்ப்பிடித்து அழுகி வடுப்படுத்திய நாடாகவன்றோ தமிழ்நாடு இன்று காட்சியளிக்கின்றது. முத்தும் முத்தமிழும் கொழிக்கும் வளமுள்ளதும் எத்திக்கும் நாகரிகமும் பண்

www.thamizham.net - Free E book No 7513

பாடும் மிக்கதாக உள்ளதுமான நாடாக வன்றோ தமிழகம் இருந்ததாக நம் இலக்கியங்கள் பெருமை சாற்றுகின்றன. இன்று, பரத்தமை தான் நாகரிகமா? கட்டிலறைகள்தாம் கலைக் கூடங்களா? இங்குக் கண்ணதாசன்கள்தாமா கலைஞர்கள்? ஐயகோ! தமிழினமே, இந்த இழிநிலையை மாற்ற வேண்டாவா!

இவற்றைப் பற்றி ஆழச் சிந்தித்ததன் பயன்தான் நாம் தொடங்கவிருக்கும் **உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின்** வெளிப்பாடு. இக் கழகம் தோற்றுவிக்கப் பெற்றவுடனே தமிழகத்தில் உள்ள எல்லா வகையான இழிநிலைகளும் இல்லாமற் போய்விடும் என்று நாம் கற்பனை செய்து விடவில்லை. உண்மைகள் சொல்லப் பெற வேண்டும்; நல்லவை சிந்தனை அளவிலேயே இருந்து விடுதல் கூடாது. அவை சொல்லாக வெளிவந்து செயலாக மலர்தல் வேண்டும். சிந்தனைக்கும் செயலுக்கும் நம் முயற்சியின் அளவு இடைவெளி கூடியோ குறுகியோ விருக்கும். அதனால் முயற்சி செய்யப்படுதல் வேண்டும். முயற்சியின் முனைப்பைப் பொருத்தது தான் அதன் முகிழ்ச்சி.

இனி, நாம், மேலே சொன்ன இழிவுகளையெல்லாம் போக்கவும், செழுமைகளை வரவேற்கவும் இங்கு எந்தக் கட்சியும் முயற்சியே செய்யவில்லை என்ற குற்றச்சாட்டை நாம் அவற்றின் மேல் திணிக்க முன்வரவில்லை. அவை ஒவ்வொன்றுக்கும் சிற்சில நோக்கங்கள் இருக்கத்தான் இருக்கின்றன. ஆனால், நாம் விரும்புகிற அத்தனை நோக்கங்களையும் இங்குள்ள ஒரு கட்சி கொண்டிருப்பதாக நாம் கூற முடியாது. முதலில் நம் மொழிக் கொள்கையே மற்ற எந்தக் கட்சியிடமும் இல்லை. இருப்பதாக ஏதேனும் ஒன்று கூறினாலும், அதனை அது கடைப்பிடிப்பதாகக் கூற முடியாது. அடுத்தபடி, தூய்மையும் நேர்மையும் அரசியலுக்கே தேவையில்லை என்றபடி, இங்குள்ள அரசியல் கட்சிகள் செயல்படுகின்றன. **'வாய்மையே வெல்லும்'** என்று எழுதிவைக்கப் பெற்று விட்டதால், வெல்லும் கட்சியெல்லாம் வாய்மையுள்ளவை என்று அவை மெய்ப்பிக்கப் பார்க்கின்றன. பொய்யும் புளுகும், கயமையும் கொடுமையும், நரிமையும் நாய்மையுமே இன்று வெற்றி பெறுகின்றன; ஆட்சியைக் கைப் பற்றுகின்றன. ஆனால், அதனாலேயே அவற்றை வரவேற்கின்ற பாங்கு மக்களிடம் அமைந்து விடக் கூடாது. முள் வளர்ந்து காடாய்க் கிடந்த நிலத்தை மாந்தர்தாம் வயல்களாக மாற்றினர். எனவே, அரசியலில் ஓர் உயர்ந்த படிநிலை வளர்ச்சி ஏற்கனவே நம் தமிழ் இலக்கியங்களில் கூறப் பெற்றுள்ளனவே — நம் தமிழின முன்னோர்களின் ஆட்சியில் கண்ட அறமாக வகுக்கப் பெற்றனவே — அவை ஏன் அரசியலாக இருத்தல் இயலாது? திருக்குறள் அறவுணர்ச்சி அரசியலுக்கு அப்பாற்பட்டதா? சட்ட திட்டங்கள்

www.thamizham.net - Free E book No 7513

காலத்துக்குக் காலம் இடத்துக்கு இடம் மாறுபட்டு இருக்கலாம் ; ஆனால் நோக்கங்கள் ஒன்றாகத்தானே இருத்தல் முடியும். மக்கள் நலந்தானே நோக்கம் ! அதைக் கொணர்வதுதானே சட்டம் ; திட்டம் ! அம் முயற்சியில் நேர்மை கூடாது, அல்லது இருக்க முடியாது என்பவன், எவன் ? அம் முயற்சியில் வாய்மை கடைப்பிடிக்க இயலாதது என்று கூறுபவன் யார் ? அவன்தான் முதல் மாந்தப் பகைவன். அவன் போன்றவர்கள்தாம் குமுகத் திரட்சியிலிருந்து களையப்பட வேண்டியவர்கள்; அல்லது அத்தகைய மனப்பாங்குதான் தமிழின அரசியலிலிருந்து அகற்றப்படல் வேண்டும். ஒரு புது மரபையே அரசியலுக்கு உருவாக்குதல் வேண்டும் ! ஏன் கூடாது ? அல்லது ஏன் முடியாது ? நாம் வளர்கின்ற ஆறறிவுடைய மக்களானால், அந்த வளர்ச்சி அழிவுணர்வுகளை நோக்கி அமைதல் எப்படிச் சரியாகும். எனவே, இத்தகு நல் முயற்சிகளில் உ. த. மு. க. தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும். இதற்கு ஏழு கொள்கைகள் அறிவிக்கப் பெற்றிருக்கின்றன. அத்தனைக்கும் இக் கழகம் பாடுபடும். இதன் கொள்கைகளைச் செயற்பாடுகளாக அறிவிக்கும் கருத்து விளக்கங்கள் தொடக்க மாநாட்டில் பரிமாறிக் கொள்ளப் பெறும்.

இந் நிலையில் இன்னொன்றையும் நாம் எண்ணிப் பார்த்தல் வேண்டும். புதுக் கட்சி ஒன்று தோற்றுவிப்பதைப் பொறுத்தது அது. இங்குள்ள கட்சிகளை எடுத்துக் கொண்டால், இனியும் ஒரு புது அமைப்பு தேவையா என்றும் எண்ணித் தயங்கவே வேண்டியிருக்கின்றது. ஆனால், ஆற்றோடு போகின்றவனை ஆற்றில் குதித்துத்தான் மீட்க வேண்டியிருப்பதைப் போல், சேற்றில் புரள்பவனைச் சேற்றில் கால் வைத்துத்தான் வெளியே எடுக்க வேண்டியிருப்பது போல், நாமும் இவ் விக்கட்டான நிலைகளுக் கிடையில் ஒரு புது இயக்கத்தைத் தோற்றுவித்துத் தமிழினத்துக்கு உள்ளுணர்வு கொளுத்த வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கின்றது. நெடுநாள் அமைந்திருந்தோம் ; ஆனால் காலமும் சூழலும் இந்தக் கட்டாயத்தை நமக்கு ஏற்படுத்திக் கொடுத்து விட்டன.

தமிழினத்துக்குள்ளேயே ஒருவனை ஒருவன் வீழ்த்த முயற்சி செய்கிறான் ; அஃதாவது திரவிட இனம் ஒன்றை ஒன்று அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இவ் வினங்கள் வீழ்த்தப் பெற்றால், அடுத்து என்ன நேரும் என்று எண்ணிப் பார்ப்பது தேவை ! தேசியம் பேசும் திருடர்கள், காட்டிக் கொடுப்பான்கள், வீடணர்கள் ஆட்சிக்கு வந்தால் என்ன நடக்கும் ! அதன் பின்னர் தமிழினம், திரவிட இனம் ஒன்றும் இருக்காது. 'இந்தி' இனம் — 'இந்திரா' இனம் — மட்டுந்தாம் இவ்விந்திய நாடு முழுமையும் என்றென்றைக்கும் ஆட்சி செய்யும். இந்த நிலைக்கு ஒரு தடைக்கல்லாக, இடைச் சுவராக நம் திரவிட — தமிழின — ஆட்சிக்கு ஒரு தோன்றாத் துணையாக — உ.த.மு.க. இயங்கும்.

www.thamizham.net - Free E book No 7513

ஓர் எடுத்துக்காட்டைத் திருச்சி செயற்குழுவில் கூடிய தென்மொழி அன்பர்களிடம் கூறினேன் ஆற்றில் பல படகுகள் இக்கரையிலிருந்து அக்கரைக்குப் புறப்பட்டன. அவற்றை நம்பி மக்கள் பலரும் படகில் ஏறினர். ஆனால் இடைவழியில் படகின் போக்குப் பிடிக்காமலோ, ஐயுற்றோ, அல்லது அச்சமுற்றோ ஆற்றில் குதிக்கின்றனர் சிலர். இவர்கள் ஆற்றில் முழுகிவிடக் கூடாது; அல்லது வேறு எங்கோ அடித்துச் செல்லும் எதிரிப்படகுகளுக்குப் போய் விடக் கூடாது. எனவே அவர்களுக்கென்று ஒரு புதுப்படகு தேவைப்படுகிறது. அதைப் போன்றது இவ் வியக்கத் தோற்றம். மேலும் இவ் வியக்கம் என்பது தென்மொழி நாற்றங்காலிலிருந்து எடுத்து நட்ட வயலைப் போன்றது. இதன் விளைச்சலைக் கொண்டு காலமே இதன் தேவையை உணர்த்திக் காட்ட வல்லது என்று தெளிதல் வேண்டும்!

இவ் வியக்கம், இப்பொழுதைக்கு—ஒரு காலக் கட்டம் வரை — அரசியலில் ஈடுபடாது. அரசியலில் ஏற்கனவே உள்ள இயக்கங்களில் தகுதியுள்ளவற்றிற்குத் தன்னழிவு நேராதவாறு அவ்வப்பொழுது இது கட்டிக் காக்கும்; துணை நிற்கும். இனி, தேவைப்படும் பொழுது அரசியல் ஈடுபாட்டைத் துறந்து விடாது. அந் நிலை ஏற்படும் வரை இது பல வகையான ஆக்கப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும். ஏற்கனவே அறிவிக்கப் பெற்ற கொள்கைகளுக்காக இது முழு மூச்சுடன் பாடுபடும். அயல் நிலத் தமிழின மக்கள் நலன்களில் இது முன்னிற்கும். அவர்களுக்கென்று, இயக்கத்தில் ஒரு தனிச் செயற்குழுவே அமைக்கப்பெறும். அவர்களுக்கு உதவு முறைகளும் செயற்பாடுகளும் வகுக்கப் பெறும். இதுவன்றி, இயக்கத்திற்கென ஏழு அறிஞர் குழு அமைக்கப் பெறும். அரசியலறிவர்குழு, குமுகாயத் திறவோர் குழு, பொருளியலறிஞர் குழு, தமிழியல் முனைவோர் குழு, அறிவியலாய்வர் குழு, கலைத்திறலாளர் குழு, பண்பியல் சான்றோர் குழு என்பன அவை. இவை ஒவ்வொன்றிலும் உலகத் தமிழறிஞர்களில் ஏழேழ்வர் உறுப்பினராக்கப் பெறுவர். ஆக மொத்தம் நாற்பத் தொன்பது தலைநிலை அறிஞர்களும் அவ்வத்துறையில் வெளிப்படுத்தும் கருத்துகளையே கழகம் செயற்பாட்டுக்குக் கொணரும். தான்தோன்றித்தனமாக எவர் மூளையில் தோன்றிய கருத்தானாலும் ஆய்வின்றி அதனைச்செயலுக்குக் கொண்டு வந்து விடாது. கழக அறிஞர் குழு ஒவ்வொன்றும் ஆண்டுக்கு இரண்டு அல்லது மூன்று முறை ஆய்வுக் கூட்டங்கள் நடத்தும். அக் கூட்டங்களில் கூறப் பெறும், அல்லது படிக்கப் பெறும் கருத்துகள், ஆண்டு முடிவில் **'உலகத் தமிழின முன்னேற்றக் கழக ஆய்வடங்கல்'** என்னும் தலைப்பில் பகுதி பகுதிகளாக வெளியிடப் பெறும். இவ்வாறு கருத்துத் தேர்வுக்கும் செயற் பாட்டுக்கும் அறிஞர்கள் துணை நின்றாலும், கழகம் எப்போதும் பொதுமக்கள்

www.thamizham.net - Free E book No 7513

சார்ந்த இயக்கமாகவே இயங்கும். அது பொதுமக்களுக்காக ஒரு நாளிதழையோ, கிழமையிதழையோ வெளியிடும். உ. த. மு க. கிளைகள் உலக முழுவதும் தோற்றுவிக்கப் பெறும். இவ்வாறு பற்பல திட்டங்களைக் கொண்டதாக உ.த.மு.க. இயங்கும். மொத்தத்தில் **இப்படிப் பட்ட கழகம் ஒன்று தேவைதான் என்று அனைவரும் கருதுமாறு இஃது இயங்கும்.**

எனவே, அனைத்துத் தமிழ் நெஞ்சங்களும் இதற்குத் துணையாக இயங்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறோம். மற்றும் இதன் தோற்றம், இதன் இயக்கம் தொடர்பான அனைத்து விளக்கங்களும் இதன் தொடக்க மாநாட்டில் விளக்கப் பெறும். இறுதியாக, இவ் வியக்கத் தொடக்கம் காலத்தின் தேவை! தமிழின வளர்ச்சி வரலாற்றில் ஒரு படி நிலை! அவர்தம் முன்னேற்றப்பாதையில் ஒரு திருப்பு முனை! எனவே, உ. த. மு. க. வாழ்க என்று ஓங்கிக் குரல் கொடுங்கள்! இதன் தொடக்க மாநாடு பற்றிய அறிக்கைகள் வேறு பக்கங்களில் உள்ளன. நல்லுள்ளங்கள் கொண்ட அனைவரும் தவறாமல் மாநாட்டில் பங்கு பெற்றுத் தமிழினத்திற்கென வலிவான ஓர் இயக்கத்தைக் கட்டமைப்பதில் ஆர்வம் காட்ட வேண்டுகின்றோம்.

— **பெருஞ்சித்திரனார்.**

# கல்வி நோக்கும் கரவு எண்ணமும்!

இந்திய அரசியலில் எவர் தலைமையிடத்துக்கு வந்தாலும் தமிழின நலத்திற்கு மாறுகவேதாம் அவர்களின் செயல்கள் இருந்து வருகின்றன. அதற்குக் கரணியம் அதிகாரம் வடநாட்டவர் கையில் இருக்க வேண்டும் என்னும் கரவான எண்ணந்தான். இந்தியாவில் எப்போதும், திரவிட இனத்தவரின், குறிப்பாகத் தமிழரின் கை ஓங்கியிருக்கக் கூடாது என்பதில் வடநாட்டு அரசியல் தலைவர்கள் ஒரு கண்ணுகவே இருக்கின்றனர். அதற்காகப் பண்டைய வரலாற்று உண்மைகளைக்கூட அவர்கள் அழிக்கத் தயங்குவதில்லை. நெருக்கடி நிலையின் பொழுது இந்திராகாந்தி புதைத்த வரலாற்றுப் பெட்டகமே இதற்குச் சான்று.

அண்மையில் கல்வித்துறையைப் பொதுப்பட்டியலில் சேர்க்க— அஃதாவது கல்வியமைப்பில் நடுவணரசும் தலையீடு செய்து, மாநில அரசுகளின் முயற்சிகளை முறியடிக்க — ஒரு முயற்சி நடைபெறுகிறது. அதற்கான காரணங்களைக் கூறும் பொழுது தலைமையமைச்சர் இந்திராகாந்தி, 'பள்ளிக் கூடப் பொத்தகங்களில் ஒற்றுமைக்கும் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் ஒவ்வாத கருத்துகள் புகுந்துள்ளன. குழந்தைகளின் மனத்திலிருந்து மாநிலப் பித்து, தங்கள் பகுதியே மேலானது என்ற மமதை ஆகிய மனப்பான்மைகளை நீக்குவதே நோக்கமாகும். முதலில் நாடு, பிறகுதான் ஒருவருடைய மாநிலம் அல்லது மொழி' என்று கடந்த ஆகத்து மாத இறுதியில் நடந்த

www.thamizham.net - Free E book No 7513

'இந்திய தேசிய ஆசிரியர் பேராய முதல் மாநாட்டை'த் தொடக்கி வைத்துப் பேசுகையில், மிகக் கடுமையாகக் குறிப்பிட்டுள்ளார்.

வரலாற்று உண்மைகளைக் கூட அழிப்பதுதான் தற்சார்பு அரசியலுக்கு ஊதியம் என்றால், அது கொடிய வல்லாண்மையே யன்றி வேறாக இருக்க முடியாது. பெரும்பாலும் இந்திய நிலக் கண்டத்திலேயே வரலாற்றால் சிறந்த மொழியையும் பண்பாட்டையும் இலக்கியங்களையும் பெற்றிருப்பது தமிழினந்தான்! அதனடிப்படை யில் மொழிப்பற்றும் நாட்டுப் பற்றும் இயல்பாகவே மிகுந்திருப்பதும் இந்த இனத்தில்தான்! தமிழ், தமிழர், தமிழ்நாடு என்றாலே அவ் வெழுச்சியை எவ்வாறேனும் தடுத்து, ஒழித்துவிட வேண்டும் என்று நினைப்பதில் வடவர்க்கு-சிறப்பாக இந்திராகாந்தி அம்மையாருக்கு இரண்டு கருத்து இருக்கவே முடியாது. 1976 நெருக்கடி நிலையில் தமிழ், தமிழ்நாடு என்று பேசியவர்களையெல்லாம் 'மிசா'ச் சிறை வரவேற்றது.

தமிழுக்காகவும் தமிழர்க்காகவும் மட்டுமே இல்லை யென்றாலும், தேசிய ஒருமைப்பாடு என்னும் முரட்டுக் கூட்டுறவுக் கொள்கைக் காகப், பல்வேறு தேசிய மொழிகளையும் இனங்களையும் அவ்வவற் றுக்குரிய கலை, பண்பாட்டு, வரலாற்று நிலைகளையும் சிதைப்பது கொடுமையானதும் குருட்டுத் தனமானதுமாகும். குழந்தைகளின் மனம் வெறும் களிமண் அன்று! அவற்றின் மரபியல் வளர்ச்சி தடுத்துச் சிதைக்கப் பெற்றால், எதிர்கால மாந்தவியலின் தனிக் கூறு களை திரிபுற்றுப் போகும் என்பதைத் தேசிய நீரோட்டத்தில் மூழ்கிக் குளிப்பவர்கள் நன்கு உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். மக்களை யெல்லாம் பொறியியல் பொம்மைகளாக்கும் முயற்சியைத் தடுத்து, மக்களினங்களின் தனித்தன்மைகளை வளரவிடுவதற்குக் கல்வி நிலை யைச் செயற்கையாகப் பொதுப்பட்டியலில் கொணர்வது தவிர்க்கத் தக்கது. வேண்டுமானால் நடுவணரசு அது தொடர்பான கருத்துகளை மாநில அரசுக்கு அவ்வப்போது கூறலாம். தமிழ் நாட்டரசு, கல்வி யைப் பொதுப்பட்டியலில் கொணரும் நடுவணரசின் முயற்சியை ஒரு போதும் ஒப்புக் கொள்ளவே கூடாது என்று கூறிக் கொள்ள விரும்புகிறோம்.

## தொலைக்காட்சியில் பாவலரேறு

தந்தை பெரியாரின் 103-ஆவது நினைவு நாளை யொட்டி வரும் 17-9-81-ஆம் நாள் இரவு 8-15-க்குச் சென்னைத் தொலைக்காட்சியில் வண்ணக்களஞ்சியத்தில், பெரியார் சிறப்பு நிகழ்ச்சியில், **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் **'பெரியாரும் தமிழும்'** என்னுந் தலைப் பில் எழுத்துரையாற்றுவார்கள், தமிழன்பர்கள் கண்டு களிக்க.

www.thamizham.net - Free E book No 7513

# செய்திகள்

## 1) மாயிறைவன் — தாமரைச் செல்வி வாழ்க !

சென்ற மடங்கல் ௩-ஆம் நாள் (19-8-81) அறிவன்கிழமைகாலை 9 மணிக்கு, சின்னசேலம் மருத்துவர் **அ. விசுவநாதன்** என்ற மாயிறைவனுக்கும் **பத்மினிதேவி** என்ற தாமரைச்செல்விக்கும், மேட்டூர் அணை, பாப்பம்மாள் திருமணக்கூடத்தில், **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** தலைமையில், மணையறவிழா இனிது நடைபெற்றது. திருமணத்திற்கு ஏராளமான அலுவலர்களும் அதிகாரிகளும் நண்பர்களும் தமிழன்பர்களும் வந்திருந்தனர். மாயிறைவன் – தாமரைச் செல்வி இருவரும் எல்லா நலனும் வளனும் பெற்று இனிதே வாழ, தென்மொழி வாழ்த்துகிறது.

## 2) பேரா. மறை. திருநாவுக்கரசு பவள விழா :

தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளாரின் திருமகனாரும், ஓய்வு பெற்ற தமிழ்ப் பேராசிரியரும் ஆகிய சிவத்திரு, திருமுறைச் செல்வர், கொண்முடிபு ஞாயிறு. **மறை திருநாவுக்கரசு** அவர்களின் 75-ஆம் அகவை நிறைவுணர்த்தும் பவளவிழா, கடந்த மடங்கல் ௭ (23-8-81)-ஆம் பக்கல், சென்னை, பெரம்பூர், விவேகானந்த மண்டபத்தில், ஆட்சி மொழிக்காவலர் திரு. **கீ. இராமலிங்கனார்** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அறிஞர்கள் **ம. பொ. சி, நெ. து. சுந்தரவடிவேலு, பாவலரேறு பெருஞ்சித்திரனார், கோ. முத்து(ப் பிள்ளை), நாரண துரைக்கண்ணன், ந. இரா. முருகவேள்,** முதலியோர், விழாநாயகரை வாழ்த்திப் பாராட்டுரை வழங்கினர். சிவநெறிச் செல்வரைப் பல்லாண்டு வாழ்கவெனத் தென்மொழியும் நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறது!

## 3) கோவிந்தராசன் — செகதாம்பாள் வாழ்க !

கடந்த மடங்கல் ௧௭, (2-9-81) அறிவன் கிழமை, தளவாய்ப்பட்டணம், ஆசிரியர் **சு. கோவிந்தராசனுக்கும்,** போழறப்பட்டி, கு. பழனியப்ப ஆசிரியர் மகளும், ஓவியச் செல்வர் ப. அறவாழி அவர்களின் தங்கையும் ஆகிய செல்வி **செகதாம்பாளுக்கும்,** உடுமலைப்பேட்டையில், தமிழ்த் திருமணம் இனிதே நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி புலவர். சாமி. சம்பந்தம், பாவலர் அன்புச் சந்திரன் (உடுமலை ஒன்றியத் தி. க. தலைவர்), பல்லடம் அறிஞர் தென்மொழி ந. முத்துக் குமரனார் ஆகியோர் நல்லுரை வழங்கினர். பாவலர் எல்லிசா மாணிக்கம் பாவுரையால் நன்றி கூறினார்.

# பிற செய்திகள்

## 1) துரைராசு — தமிழ்ச் செல்வி வாழ்க !

நெடுநாளைய தென்மொழி அன்பர், திரு. **மணிவெள்ளையன்** (மலேசியா) அவர்களின் இளவல் மருத்துவர் **மு. துரைராசு** அவர்

www.thamizham.net - Free E book No 7513

களுக்கும், தமிழாசிரியர் திரு.சாமி அவர்களின் மகள் **தமிழ்ச்செல்விக்**கும், கடந்த 16-8-81-ஆம் நாள் மாலை 6 மணியளவில், கிள்ளான் தேவான் அம்சாவில் தமிழ்த் திருமணம் சிறப்புற நடைபெற்றது. திருச்சுடர் **கே. ஆர். இராமசாமி** அவர்கள் தலைமையில் நடைபெற்ற இத் திருமண நிகழ்வில், திரு. அ. இளவழகு தமிழ் வாழ்த்துப் பாடினார். 'சங்கமணி' துணையாசிரியர் திரு. மா. திருமாறன் அவர்களின் வரவேற்புரையுடன் நிகழ்வுற்ற இத் திருமண விழாவில் பாவலர் தென்மொழி **முல்லைவாணன்** அவர்களும், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தலைவர் திரு. **இர. ந. வீரப்பன்** அவர்களும் வாழ்த்துரை வழங்கினார். மணமக்கள் சார்பில் மணமகன் நன்றி கூறினார். இத் திருமணம் ஒரு காதல் திருமணமும் ஆகும். இத் திருமண அன்பளிப்பாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உருபா 400 (நானூறு) விடுக்கப் பெற்றது. மணமக்கள் எல்லா வகையான நலனும் வளனும் பெற்று இனிதே வாழ்ந்து, நீடுதமிழ்த் தொண்டாற்றிப் பெயரும் புகழும் பெற்றோங்கத் தென்மொழி நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறது!

## உ) முருகானந்தம் — அங்கயற்கண்ணி வாழ்க!

கடந்த மடங்கல் கஅ (3-9-81) ஆம் பக்கல், வியாழன் காலை 10 மணியளவில் மலேசியா தென்மொழியன்பர், பரமக்குடி, திரு. **க. பிச்சை** அவர்கள் மகள் செல்வி **அங்கயற்கண்ணிக்**கும், செல்வன் முருகானந்தத்திற்கும், மதுரையில் இனிதே திருமணம் நடைபெற்றது. தமிழ்நாட்டு, வெளிநாட்டு அன்பர்கள் செல்வர்கள் பலரும் வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர். திருமண அன்பளிப்பாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உரு 50 (ஐம்பது) வரப்பெற்றது. மணமக்கள் எல்லாச் சிறப்பும் பெற்று இனிதே இல்லறம் நடத்த, தென்மொழி நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறது.

## ௩) இளமாறன் — நற்குணதேவி வாழ்க!

அழுந்திய தென்மொழி அன்பரும், வினையாளருமாகிய, **நா. இளமாறன்** (இளநிலைப் பொறியாளர், கோனேரிப்பட்டி) அவர்களுக்கும், தேவதானப்பட்டி இல. அய்யாத்துரை அவர்களின் மகள் செல்வி **நற்குணதேவிக்கும்**, கடந்த மடங்கல் அ (24 8-81)-ஆம் நாள் திங்கள் மணமகள் இல்லத்தில் வாழ்க்கை ஏற்பு விழா, புலவர் **இறைக்குருவனார்** அவர்கள் தலைமையில் இனிதே நடைபெற்றது. மணமக்கள் நிறைவுற்ற இல்லறம் ஏற்று எந்தமிழ்க்கும் இனத்திற்கும் நாட்டிற்கும் இனிதே தொண்டாற்றி வாழ்வாங்கு வாழத் தென்மொழி மன நிறைவுடன் வாழ்த்துகிறது.

## 4) சிங்கள இனவெறிக்குக் கண்டனப் பேரணி:

ஈழத் தமிழின ஒடுக்கலைக் கண்டித்துக் கடந்த 19-8-81 அன்று சென்னையில், மாபெரும் மாணவர்கள் பேரணி ஒன்று நடந்தது.

www.thamizham.net - Free E book No 7513

ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான மாணவர்களும், பிற ஆதரவு இயக்கத்தினரும் கலந்து கொண்டனர். சென்னை நேப்பியர் பூங்கா வினின்று புறப்பட்ட ஊர்வலம், அண்ணாசாலை வழியாகச் சென்று இலங்கைத் துணை உயராணையர் அலுவலகத்தை அடைந்து, தூதரைக் கண்டு கண்டனக் கோரிக்கை தந்தது. தமிழீழத் தோழ ை க் கழகச்சார்பில்,ஊர்வலத்தில் திருவாளர்கள் அரு கோபாலன் தென்மொழி மறை மித்தலின்பனார், தென்மொழி ப. முருகவேள் ஆகியோர் கலந்து கொண்டு கோரிக்கை தந்தனர்.

## உறைத்த தென்மொழியன்பர் மறைவு

நீண்ட நாளைய தென்மொழியன்பரும், சூலூர் வட்டாரப் 'பெரியார் சமவுரிமைக் கழக' அமைப்பாளரும், 'தமிழக மக்கள் பண்பாட்டுக் கழக'த்தின் தலையாய முன்னோடியுமான அன்பர் **சூலூர் தமிழடியான்** அவர்கள் அரத்தசோகை நோயின் காரணமாகக் கடந்த 26-8-81 அறிவன் முற்பகல் 11 மணியளவில் திடுமென மறைந்து விட்டார் என்ற செய்தி கேட்டு மிகவும் வருந்துகிறோம். இறுதிவரை சிறிதும் தன்னல நோக்கமின்றிப் பொதுநல நோக்கமே மிகுதியும் கொண்டு, தமிழின - நில விடுதலை பற்றியே இடைவிடாமல் எண்ணியும் பேசியும், ஒடுக்கப்பட்டவர்களின் எழுச்சிக்காகப் பெரிதும் உழைத்தவர் அவர். சிறந்த முற்போக்கு எழுத்தாளராகவும் பாவலராகவும், நடிகராகவும் இருந்த அவர் ஒரு தமிழ்ப் புலவர். தெருக்களிலும் சேரிகளிலும் சென்று பணியாற்றும் எளிமை அவரிடம் இயல்பாக அமைந்திருந்தது. அவர் மறைவு கேட்டு அவர்தம் துணைவியார் இரண்டு மூன்று நாட்கள் நினைவிழந்து விட்டதாக அறிகிறோம். சிறந்த பொதுத் தொண்டராக விளங்கிய அவரின் மறைவால் பெரிதும் துயருறுகின்றோம். அவரைப் பிரிந்து வாடும் அவர் வீட்டார்க்கும் அன்பர்களுக்கும் உடன் தொண்டர்களுக்கும் தென்மொழி தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

---

**சென்னை பெரியார் திடலில் உ. த. மு. க. தொடக்க மாநாடு நவம்பர் 7,8. அனைவரும் அணியமாகுங்கள்!**

---

## தமிழ்ச்சிட்டு — ஓர் அறிவிப்பு

'உலகத் தமிழின முன்னேற்றக் கழக'த் தொடக்க மாநாட்டு வினைகளால் இம்மாதத் தமிழ்ச்சிட்டு (குரல் 13 ; இசை 4) வெளிவரவில்லை. அடுத்த மாத இதழுடன் சேர்ந்து (குரல் 13 இசை 4-5 ஆக) வெளிவரும். அன்பர்கள் பொறுத்துக் கொள்க. — அமைச்சர்.

---

www.thamizham.net - Free E book No 7513

# உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் உயர்ந்த குறிக்கோள்கள்.

0 தூய்மையான தமிழ் மொழி முன்னேற்றம் !

0 சாதி, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம் !

0 இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல் !

0 தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல் !

0 மன, அறிவு, வாழ்க்கை — இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை, வளர்ச்சி !

0 எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகு முறை !

0 பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம் ! — ஆகிய ஏழு கொள்கைகள் !

---

### The Exalted Aims of the

# Ulaga Thamizhina Munnetra Kazhagam

## ('Oo. Tha. Mu. Ka.')

### (A Progressive Movement of the Tamilian Peoples)

0 A progressive improvement of the Pure Tamil language

0 An Egalitarian Society unmutated by, and shorn of the divisive forces of caste and religion.

0 A Polity rid of lowly degradations, bickerings and deceit.

0 A Socialistic Economy based on the needs of Tamil nationality.

0 The Mind, Knowledge and Life — the growth of an unabhorrent art - form, which enriches and invigorates these.

0 A Scientific approach in all the spheres, in accordance with the Times.

0 A cultural intercourse, consistent with ancient Tamil tradition and humanological eminence.

— The Sterling Principles, Seven in all !
Our Aim's to Strive for them, Anon and On !

---

மொழிபெயர்ப்பு: தென்மொழி மறை நித்தலின்பன்

www.thamizham.net - Free E book No 7513

(அட்டை 4-ஆம் பக்கத் தொடர்ச்சி)
தமிழர் ஆலை வ ம் ஒட்டு மொத்தமாக வெளியேற வேண்டும் என்ற கருத்தை முழு மனத்தோடு ஏற்றுக் கொள்பவன் நான். ஆனால் மீனுட்சிபுரம் பற்றிய தங்களது கருத்துகள் தவறானவை என்பது எனது எண்ணம். மீனுட்சி புரத்து மக்கள் இந்து மதத்தினின்று வெளியேறியிருக்கலாம். அது பாராட்டிற்குரியது. அவர்கள் முக மதியர்களாக மாறியிருக்கலாம். அஃது அவர்கள் விருப்பம் அதில் பாராட்டிற்கோ பழிச் சொல்லுக்கோ ஏதும் இல்லை. ஆனல் அவர்கள் தங்களது அழகான பெயர்களை அராபிய, உருதுப் பெயர்களாக மாற்றிக்கொள்ள வேண்டியது ஏன்? பொன்னையன் நல்லான், அழகன் என்ற தமிழ்ப்பெயர்கள் எல்லா மதத்தவருக்கும் பொருந்துவன தாமே! இவற்றை மாற்றி அரபுப் பெயர்களாக வைத்துக் கொண்டுள் ளார்களே, இதில் எங்கே தமிழ் வாழ்கிறது? கிறித்தவ மதத்தில் சேர்ந்தோர் கூட அழகாக நற்குணம், மகிழ்ச்சி என்ற பெயர்களை அல்லவா வைத்துக் கொள்கிருர்கள். இதனை எடுத்துக் காட்டும் கண்டனஆசிரியவுரைதான் நான் தங்களிதழில் எதிர் பார்த்தது. மிஞ்சியது ஏமாற்றமே!

நன்ருகச் சொல்லுகிறேன். இந்து மதம் வேறு; சைவம் வேறு. சைவத்தை அழிக்க வந்த ஆரியர்கள் இயலாமையினல் அதனைத் தங்கள் மதத்தினுள் புகுத்திக் கொண்டு இந்து மதத்தினை ஓர் அவிய லாகச் செய்துள்ளனர். சைவத்தை வளர்க்க வந்தவைதாம் இற்றை மடங்கள். அவற்றுள்ளும் ஆரியர் புகுந்து தம் வயிற்றை வளர்க் கின்றனர். சைவத்தைத் தாக்கி இந்து மதத்தைத் தூக்கி வைத்து எழுதப் பட்டதுதான் இராமாயணம். சைவத்திலே சாதி வேற்றுமை கள் கிடையா. ('வர்ணுசிரமம்') குலப் பிரிவு முறை கிடையாது. களவு மணம் ஆதரிக்கப்பட்டது. இறை வழிபாட்டில் இடைத்தரகர் கிடையாது. தவத்திரு. குன்றக்குடி அடிகளார் போன்றோர் இதனை வெளிச்சமிட்டுக் காட்டித் தமிழரை அறியாமையிலிருந்து மீட்க வேண்டும். மேலும் ஒன்று! இன்றைய பார்ப்பனர்கள்-அவர்களும் வாழட்டும்; ஆனல் அடுத்தவனின் குருதியில் அன்று. அவர்கள் வடமொழியிலிருந்துதான் தமிழ் பிறந்தது என்ற வறட்டுக் கொள்கை யைக் கைக் கொண்டுள்ளனர். அவர்களுடைய அன்பும் ஆவலும் வடக்கே, வடமொழியின்பால் உள்ளது. அதுபோலத்தான், இப் ராஹிம் அப்துல் ஜப்பார் போன்று பெயர் வைத்துக் கொள்ளும் இன்றைய மீனுட்சி புரத்து மக்களும் ஆவர். அவர்தம் வேட்கை உருது அராபிய மொழிகளின்பால்தான் செல்லுமே யொழிய தமிழின் பாற்செல்லாது. எனவே, இம்மத மாற்றம் அல்லது மொழி மாற்றம் ஏற்புடைத்தன்று.

அவன் பார்ப்பான் சமற்கிருதத்தால் இறைவழிபாடு கோரு கிருன். இவன் (இசுலாமாக மாறியவன்) உருது மூலமாகக் கேட்

(தொடர்ச்சி 39-ஆம் பக்கம்)

www.thamizham.net - Free E book No 7513

# உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்
# தொடக்க மாநாடு, சென்னை.
## (துலை ௨௨, ௨௩. நவம்பர் 7, 8.)
## நன்கொடை விடுத்தல் பற்றிய
# அமைப்பாளர் வேண்டுகோள்!

பேரன்புடையீர்,

வணக்கம்.

விரைவில் உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க மாநாடு, சென்னையில் நடைபெற விருப்பதை அறிவீர்கள். இரண்டு நாள் நடைபெறும் ஒருபெரிய மாநாட்டிற்கும், தொடர்ந்து நடைபெற விருக்கும் இயக்கத்திற்கும் ஏராளமாகப் பணம் தேவை என்பதும் உங்களுக்குத் தெரியும். எந்தக் கொள்கையையும் பணம் இருந்தால் தான் நடைமுறைப் படுத்த முடியும். பணம் எவ்வளவுக் கெவ்வளவு மிகுகின்றதோ செயலும் அவ்வளவுக் கவ்வளவு வலுப்பெறும்.

ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு.

பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று.

என்னும் குறள் மணிகள், பொருள் வினைக்கு மிகவும் இன்றியமையாதது என்பதை எடுத்துக்காட்டும். ஓர் இயக்கத்துக்குப் பொருள் மிகத் தேவை என்பதால்தான், இப்பொழுதுள்ள அரசியல், குமுகியல் இயக்கங்கள் அனைத்தும் பொருளை எப்படியேனும் திரட்டித் தம் தம் வலிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்று முயற்சி செய்கின்றன; செய்து கொண்டும் வருகின்றன.

பொருள் தேவை என்பதால் அதனை எப்படியேனும் திரட்டி விடலாம் என்பது சிறந்ததன்று. நோக்கம் எவ்வளவு சிறந்ததோ, அது நிறைவேற்றப் பெறும் வழியும் சிறந்ததாக இருந்தால்தான், அந் நோக்கம் நிலைப்படும்; உறுதி பெறும்; சிறப்புறும். தவறான வழியில் பொருளை ஈட்டி நல்ல செயல்களைச் செய்து விட முடியாது.

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்.

செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப்பு உடைத்து.

என்பன பேரறிவாளர் வாயுரை! பொருள் நல்லவர் கையிலும் வல்லவர்கையிலும் வந்து சேரும் பொழுதுதான் அஃது உலகநலத்திற்கு உதவ முடியும். 'பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால், கலந்தீமையால் திரிந்தற்று!'

www.thamizham.net - Free E book No 7513

பொருளை அருளொடும் அன்பொடும் ஈட்டவேண்டும் என்பதும் அவ்வாறு தீதின்றி திறன் செய்யும் நோக்கத்துடன் வந்த பொருளால்தான் அறத்தையும் இன்பத்தையும் செய்ய முடியுமென்பதும், பேராசான் கொள்கை. எப்படியாவது பொருளைத் திரட்டி எதையாவது செய்து விடுதல் என்பது, ஆற்றை நினைத்துச் சேற்றில் கால் வைப்பதாகும். தேனை நினைத்துப் புற்றில் கைவிடுவதாகும்!

ஓரியக்க வெற்றிக்குத் தேவையானவை மூன்று. அவை வலிந்த கொள்கை, வலிவான செயல் மறவர்கள், வலிவான பொருளடிப்படை. கொள்கை, ஆள், பொருள் இம் மூன்றினுள்ளும் முதலில் கொள்கையை அடுத்துத் தேவையானது பொருளே.

> குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்று
> உண்டாகச் செய்வான் வினை.

என்பர் தலைமைச் சான்றோர் பொருளிருந்தால் படை வலிவையும் உண்டாக்கி விடலாம் என்பதால்தான் திருக்குறளின் பொருளதிகாரத்தின் பின் படை வைக்கப் பெற்றது. நம்மிடத்தில் நல்ல வலிவான கொள்கை உண்டு; ஆள் வலிமையும் ஓரளவுண்டு; பொருளிருந்தால் ஆள் வலிமை தானுகப் பெருகி விடும். அதன் பின்னர் கொள்கை வழி வினை செய்தல் மிக மிக எளிதாகி விடும். கடந்த காலத்தில் தென்மொழியின் வினைவுகள் ஏராளம்! பட்டியலிட்டுப் பார்ப்பவர் விளங்கிக் கொள்வர். விளங்கிக் கொள்ள மறுப்பவர் மனத்தில் அமையாதவர்; சொல்லினால் அவர்களைத் தேற்றுதல் இயலாது.

தென்மொழி இதுவரை ஒரு சில நல்ல நோக்கங்களுக்காகவும் அறச் செயல்களுக்காகவுமே பொருள் தண்டியுள்ளது.

1). பாவாணர்க்கு நன்கொடை வழங்க. (1963)
2) தென்மொழி அச்சகம் அமைக்க (1965)
3) பாவேந்தர் குடும்பத்திற்கு உதவ. (1967-68)
4) இந்தியெதிர்ப்பு மறவர் ஈழத்தடிகளுக்கு உதவ. (1969-70)

இவையல்லாமல் தென்மொழிக்கு அவ்வப்பொழுது வரும் நன்கொடைகள் தாமே விரும்பித் தரப் பெறுபவை. நான் 1976-இல் 'மிசா'ச் சிறையில் ஓராண்டுக் காலம் இருந்தபொழுது கூட அக்கால் தென்மொழிக்கும் குடும்பத்திற்கும் மிகு துன்பமும் மிகு தேவையும் ஏற்பட்டிருந்தும் கூட-அன்பர் சிலரும் என் துணைவியும் நன்கொடை திரட்ட அறிக்கை விடலாம் என்று சிறையிலிருந்த என்னை இசைவு கேட்ட பொழுது நான் அதை வன்மையாக மறுத்து விட்டேன். இருந்தும், குறிப்பறிந்து மெய்யன்பர்கள் பலரும் அருளாளர் சிலரும் துணை நின்றதால் தென்மொழியும் குடும்பமும் பிழைத்தன.

பொது மக்களிடம் பொருள் கேட்பதில் ஒரு நயமை இருத்தல் வேண்டும்; வெட்கப் படுதலும் வேண்டும்; அதற்கு இன்றியமையாத தேவையும் வேண்டும். ஏற்கனவே இருக்கின்ற பொருள் கோடி கோடியாய் மலைபோல் குவிந்திருக்க, மேலும் அதற்கு இதற்கு என்று

www.thamizham.net - Free E book No 7513

தம்மைப் பின்பற்றும், ஒன்றுமறியாத, ஆனால் நம்பிக்கையும் அன்பு முடைய — பொதுமக்களை ஏமாற்றிப் பொருள் தண்டுவது—தம்மை யும் தம்மைச் சார்ந்தவர்களையும் வளர்த்துக் கொள்ளப் பயன் படுமே யன்றிக் கொள்கையையும் அது தொடர்பான பொதுநலன்களையும் வளர்க்கப் பயன்படாது. இப்பொழுதுள்ள இயக்கங்கள் மேலும் மேலும் பொருளைக் குவிக்கவே நன்கொடை தண்டுவதை அன்பர்கள் அறிவர். ஒரு சில பணக்கார நிறுவனங்களும் அத்தகைய அரசியல் கட்சிகள். தனி இயக்கங்கள் ஆகியவற்றின் நச்சரிப்பும் இடை யீடும் தாங்காமல் அவற்றுக்கு ஏராளமான வகையில் நேரடியாகவோ மறைமுகமாகவோ பொருளுதவி செய்வதை நாம் அனைவரும் ஒரு வாறு உணர்ந்துள்ளோம்.

நம் இயக்கத்திற்கும் பொருள் தேவைதான். இன்னுஞ் சொன்னால் மிகுந்த பொருளும் தேவையே! பொருளில்லாமல் எந்தப் பொதுப் பணியும் செய்யவே முடியாது. ஆனால், தொடக்க நிலையில் — விதைப்பு நிலையில் உள்ள நமக்கும், மிக வளர்ந்து மரமாகிக் காய்த் துக் கனியுதிர்க்கும் நிலையிலுள்ள பிற வியக்கங்களுக்கும் உள்ள வேறு பாட்டை அன்பர்கள் ஊன்றிக் கவனித்தல் வேண்டும். விதையை ஊன்றி வளர்ப்பதற்குத்தான் நீர் தேவை; எரு தேவை; காவல் தேவை. அது வளர்ந்து மரமாகிப் பூத்துக் காய்த்துக் கனி கொடுத் துக் கொண்டிருக்கும் பொழுதும், அவை அவ்வளவில் தேவையில்லை. ஒரு நிலைப்பட்ட பின் அவற்றைத் தவிர்க்கவே செய்யலாம். காலத் திற்கும் நன்கொடைத் தண்டித் தண்டியே உயிர் வாழும் இயக்கங்கள் மக்கள் குமுகாய மரத்தில் உள்ள புல்லுருவிகளைப் போன்றனவும், உடல்களைப் பற்றிக் குருதியை உறிஞ்சிவாழும் ஒட்டுண்ணிகளைப் போன்றனவும் ஆகும்.

ஓர் இயக்கம் தொடக்கத்தில் தாயின் மடியிலுள்ள குழந்தையைப் போன்றது. அதற்குத் தாய்ப்பால் அல்லது ஊட்டுப்பால் தேவை. ஆனால் அதுமடியை விட்டு எழுந்து நடக்கத் தொடங்கி விட்டால் அதற்கு அது தேவையில்லை. வேறு ஊட்டப் பொருள்களை ஒரு கால கட்டம் வரையில் கொடுக்கலாம். ஆனால் அது வளர்ந்து மலர்ந்து ஆளாகிய பின்னும், தாயின் மார்பை உறிஞ்சுவதோ, தாய் சோறு பிசைந்து ஊட்ட வேண்டுமென்பதோ மிகவும் கொடுமையாகும். அது போல்தான் இன்றைய இயக்கங்கள், மீசை முளைத்து ஆளாகிப் பெரியவர்களாகி நிற்பது போல் நின்றாலும், பொதுமக்கள் என்னும் தாயைப் புரக்காமல், அவள்பால் நன்கொடை என்னும் மார்புப் பாலுக்கும் ஊட்டு சோற்றுக்கும் உலா வருகின்றன; அலைகின்றன. அவற்றின் வரிசையில் — தகுதியில் — நாம் திரட்ட விரும்பும் இந்த நன்கொடை முயற்சியையும் எண்ணி விடுதல் கூடாது. அவ் வியக் கங்கள் நன்கொடை என்னும் பெயரில் செய்யும் பொதுமக்கள் கொள்ளையடிப்பைப் பார்க்கும் பொழுது, நிலைகளை நினைக்கும்

பொழுது, எதன் பொருட்டானும், பொது மக்களிடம் போய் நன்கொடை என்று நாமும் கேட்பது, நமக்கு உயிர் நடுங்கும் நாணமாக விருக்கின்றது. ஆனாலும் என் செய்வது? பொருளில்லாமல் ஒன்றும் செய்ய வியலாதே! தொடக்கத்தில் ஓரளவு எல்லாரும் சேர்ந்து தள்ளித்தானே இந்த எளிய புதுவண்டியை ஓட்டம் விட வேண்டியுள்ளது. இதற்கு மேல் சொல்வதற்கு என் உள்ளம் இடந்தரவில்லை.

இறுதியாக உங்களிடம் கூற விரும்புவது இதுதான். என் இரு **கைகளையும் நீட்டி நான் உங்கள் வீடு வந்து கேட்பதாய் அன்பர்கள் எண்ணிக்கொள்ள வேண்டும்.** விடுக்கப்பெறும் தொகை மாநாடு நடப்பதற்கும் இயக்க அமைப்பிற்கும் அது தொடர்ந்து இயங்குவதற்கும் உதவுதல் வேண்டும். இவற்றுக்கெல்லாம் பெரிய அளவு தொகை திரட்டப் படுதல் வேண்டும். இவ்வகையில் ஒதுக்கப் பெறும் தொகை போக, எச்சத் தொகையைக் கொண்டு, இயக்கத்திற்கென்று ஒரு நாளிதழோ (அதுதான் மிக்க நலம் பயப்பது), கிழமை இதழோ உடனே தொடங்கப் பெறுதல் வேண்டும். இம் முயற்சிகளுக்கெல்லாம் துணையாக நிற்க, அவரவர்கள் தம்மால் இயன்ற அளவு உதவுதல் வேண்டும். உதவுதல் கட்டாயம் தேவையானது; இன்றியமையாதது. எவரும் ஏனோ தானோ என்று கருதி விடக் கூடாது.

ஆங்காங்குத் தக்க அன்பர் பலர்க்கும் தென்மொழி முத்திரையிட்ட நன்கொடைப் பற்றுமுறிகள் விடுக்கப் பெற்றுள்ளன. அவர்கள் வழியாகவும் நன்கொடை தரலாம். **தென்மொழிப் பற்றுமுறிகள் இல்லாமல் பொருள் தண்டுவதை அன்பர்கள் செய்தல் வேண்டா.** அவ்வாறு இங்கிருந்து முத்திரையிட்டு விடுக்கப் பெற்ற பற்றுமுறியின்றியோ, தாமாக அச்சிட்டுக் கொண்ட பற்றுமுறி வழியாகவோ, தொகை தண்டப்பெறுமானால், அவ்வழி அன்பர்கள் நன்கொடை தராமலிருப்பதுடன், நமக்கும் செய்தியைத் தெரிவிக்கக் கேட்டுக் கொள்கிறோம். 'நன்றாற்றலுள்ளும் தவறுண்டு அவரவர் பண்பறிந்து ஆற்றாக் கடை' என்னும் பொன் வரிகளை நினைவு கூர்க.

மற்றபடி, தென்மொழியன்பர்களின் ஆர்வத்தை இதில் அணிபெறக் காட்டி, இவ்வியக்கம் வெற்றி பெறச் செய்ய வேண்டும், என்று பல்லாற்றானும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

தொகை வளரச் செயல் வளரும்; செயல் வளரக் கொள்கை வளரும்; கொள்கை வளர வளரத்தான் தமிழ்க் குமுகாயமே வளரும்; மலர்ச்சியுறும்; தலை நிமிரும்! நாம் எதிர்பார்க்கும் அனைத்து விளைவுகளும் உருவாகும்!

நீங்கள் அன்புடன் தரும் ஒவ்வொரு காசும், அருளுடன் தரும் பொருட் குவையும் இயக்கத்தைக் கட்டுவிக்கும் ஒவ்வொரு செங்கலும் சுதையுமாகும்! அவ் வியக்கக் கால்கோள் விழா நன்கு நடந்

www.thamizham.net - Free E book No 7513

தேற வேண்டும் என்னும் நீங்கள் கொள்ளும் அவாவினால்தான் இவ் வியக்கக் கட்டடம் நன்றாகச் சமைக்கப் பெறும்! அக் கட்டடம் உங்களுடையது! உங்கள் ஒவ்வொருவருக்கும் சொந்தமானது!

**பல வகையிலும் ஆழ்ந்து எண்ணித் திட்டமிட்டுள்ளோம்!**

அத் திட்டம் வெற்றி பெற உங்கள் ஒத்துழைப்பு மிக மிக இன்றியமையாதது; தேவையானது!

உங்கள் ஒவ்வொருவர் பங்கும் அதில் கட்டாயம் இருத்தல் வேண்டும்!

மலை மலையாகப் பொருள் குவியுங்கள்! அலை அலையாகச் செயல்கள் மலரும்!

"அல்லவை தேய அறம் பெருகும் நல்லவை நாடி இனிய சொலின்!"

உங்கள் பங்கை இன்றே அனுப்பி வையுங்கள்! உங்கள் ஒவ்வொருவருக்கும் தனியாக விடுக்கப் பெற்ற வேண்டுகோளாக இதைக் கருதிக் கொள்ள வேண்டுகிறோம்.

தொகை நேரடியாக விடுக்க வேண்டிய முகவரி:

**பெருஞ்சித்திரனார், அமைப்பாளர், உ. த. மு. க.**
**மே/பா. தென்மொழி, சென்னை-5.**

பல வகையான சட்ட இடர்ப்பாட்டால், நம் முகவரியே தரப் பெற்றிருக்கின்றது. அன்பர்கள் விரைந்து செயல் பட வேண்டு கின்றேன்.

நன்கொடை நல்குக! பொருள் குவிக்க!
நலன்கள் தருக! வலி தருக!
பொன்கொடை போலப் போற்றிடுவேன்!
புலன்கள் அனைத்தும் ஒப்படைப்பேன்!
வன்கடை யாளர் தமிழழிக்கும்
வஞ்சகச் செயலை முறியடிப்பேன்!
தென்கடை நின்ற தமிழினத்தைத்
தேற்றவும் உயர்த்தவும் எனையழிப்பேன்!

அன்பர் தருக! அருள் நிறைந்த
அறவோர் பெரும்பொருள் நல்கிடுக!
தென்தீந் தமிழும் தமிழினமும்
தென்னுட் டுயர்வும் குருதி, தசை,
என்பும் போலக் கருதியுயிர்
இயங்கும் வரையும் இயங்கிடுவேன்!
தென்பும் துணிவும் பொருள்வலிவும்
சேர்ந்தால் முழுதும் செயலாமே!

தென்மொழி. 21-8-81 } அன்பன், பெருஞ்சித்திரன்.

www.thamizham.net - Free E book No 7513

தொடர்-2

# பஞ்சாபில் பிரிவினைக் குரல்!

**— ப. பத்மநாபன், க.மு., ச. இ.**

சீக்கியர்களிடையே பெரும்பாலும் நல்ல கல்வியறிவு பெற்றவர்களே சாண்டிகார் மாநாட்டில் கலந்து கொண்டனர். மிக உயர்ந்த பதவியில் இருந்தவர்கள் உள்பட, ஓய்வு பெற்ற அரசு அலுவலர்கள், பெரிய தொழிலதிபர்கள், நிலவுடைமையாளர்கள், முதலிடுவோர் ஆகியோரும் பங்கு பெற்றிருந்தனர். முன்னாளைய பஞ்சாப் மற்றும் அரியானா மாநிலங்களின் உயர்நெறிமன்றநடுவர் திரு அர்பான்சுசிங் (Justice Harbans Singh) மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவராக இருந்தார். மாநாட்டுத் தீர்மானத்தை ஆதரித்தவர்களுள்ளும், அல்லது பேசியவர்களுள்ளும ஓய்வு பெற்ற மருத்துவத் துறை இயக்குநர் (Director of Medical Services) பர். சோகன் சிங் (Dr. Sohan Singh), புகழ் பெற்ற சாண்டிகார் முதுநிலை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலைய, இயக்குநராக (Director of Post-Graduate Institute of Medical Education and Research, Chandigar) அண்மைக் காலம் வரை இருந்த பர்.சே.எசு.நேதி (Dr.J.S Nedi) ஆகியோரும் அடங்குவர். மாநாட்டில் ஏற்பட்ட சீக்கிய நாடு ஆதரவுக் குரலை திரு.தில்லான் அல்லது மாநாட்டைக் கூட்டிய வேறு எவரும் வரவேற்கவில்லை என்றும், இன்னும் அவர்கள் அக் குரலுக்கும் தங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று தெளிவு படுத்தியுள்ளார்கள் என்றும் திரு. அர்பான்சு சிங் தாம் வெளியிட்ட அறிக்கை ஒன்றினில் கூறியுள்ளார். அரசியலைத் தவிர்க்க வேண்டும் என்ற அடிப்படைக் கொள்கையினின்று 'தலைமைக் கல்சா திவான்" விலகிச் செல்கின்றது என்ற குற்றச் சாட்டையும் அவர் மறுத்தொதுக்கினர். கல்சாதிவானில் அதன் அரசியல் தலையீடுகள் குறித்துக் கருத்து வேறுபாடுகள் தோன்றியுள்ளன. திரு உச்சல் சிங் (Mr. Ujjal Singh), தில்லியில் வாழும் திரு. அர்பான்சு சிங் (முன்பு குறிப்பிட்ட நடுவர். திரு அர்பானசு சிங் அல்லர்) போன்ற நீண்ட நெடுங்கால உறுப்பினர் சிலர் கல்சா திவானின் தலைவர் திரு. சுர்சீத் சிங் மசிதியா (Mr.Surjit Singh Majithia) விற்குத் தங்களின் விலகல் மடல்களை (Resignation Letters) அனுப்பியுள்ளனர்.

**இந்தியத் தலைமை அமைச்சரின் கவலையும், நடுவண், மாநில அரசுகளின் நடவடிக்கைகளும் :**

ஏப்பிரல் திங்கள் இரண்டாம் கிழமையில் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த, இனத் தேசியத்தில் நம்பிக்கை இல்லாத ஆனால் இந்திய தேசியத்தில் நம்பிக்கை உள்ள பாராளுமன்ற உறுப்பினர் (இந்திரா பேராயத்தைச் சேர்ந்தவர்) ஒருவர் இந்தியத் தலைமை அமைச்சர் திரு வாட்டி இந்திரா காந்தி அம்மையார் அவர்களைச் சந்தித்து அகாலி தல் கட்சி பஞ்சாபில் செய்துவரும் தனிநாடு அல்லது தன்னாட்சிப்

www.thamizham.net - Free E book No 7513

பரப்புதல் பற்றியும், அதற்கு மக்களின் ஆதரவு பற்றியும் கூறினார். தமது கட்சியினர் ஏன் எதிர்ப்பரப்புதலும் நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்று தலைமை அமைச்சர் வினவியுள்ளார். பஞ்சாப் மாநில முதல்வர் திரு. தர்பர சிங் (Mr Darbara Singh) நடுவண் அரசு உள்துறை அமைச்சர் திரு. செயில் சிங் (Mr. Zail Singh) தவிர வேறு எந்த பஞ்சாபி தலைவர்களும் "அகாலி தல்"லின் பிரிவினை அல்லது தன்னுட்சிப் பரப்புதலுக்கு எதிராக எதுவும் கூறவோ, செய்யவோ இல்லை என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. பஞ்சாப் முதல்வர் அகாலிகளின் கோரிக்கையை மிக வன்மையாக எதிர்த்து உள்ளார். நடுவண் அரசின் உள்துறை அமைச்சர் பாராளுமன்ற மாநிலங்கள் அவையில் அகாலிகளின் கருத்துப்பரப்புதல் பற்றி ஓர் அறிக்கை தந்துள்ளார்.

இந்தியத் தலைமை அமைச்சருக்குக் கமுக்கப் புலனாய்வுத் துறையினரின் அறிக்கைகளும் கிடைத்துள்ளன. அகாலிக் கட்சியின் தீவிரக்காரர்கள் தனிநாடு, தன்னுட்சிக் கோரிக்கைகளைப் போட்டி போட்டிக் கொண்டு ஆதரிக்கின்றனர். ஆனால் மூத்த தலைவர்களிடையே கட்சியில் இது தொடர்பாகக் கருத்து வேறுபாடுகள் நிறைய உண்டு. முன்னாள் முதல்வர் திரு. பிரகாசு சிங் பதல் போன்றவர்கள் தனிநாட்டு அல்லது தன்னுட்சிக் கோரிக்கைகள் சீக்கியர் நலன்களைத் தாக்குறச் செய்யும் என்று கூறி அவற்றை எதிர்க்கிறார்கள். ஆனால் அந்த அணியைச் சேர்ந்த இரு முகாமையுள்ள மூத்த தலைவர்களான திரு. லோங்கோவால் மற்றும் திரு. டோக்ரா (Mr. Tohra) ஆகியோர் தனிநாடு கோரிக்கை பற்றியே திரும்ப திரும்பக் கூறி வருகிறார்கள். பஞ்சாப் மாநிலப் பாராளுமன்ற உறுப்பினர் திருவாட்டி. காந்திக்கு அளித்த அறிக்கையில் சாண்டிகர் மாநாட்டில் தனிநாடு கோரிக்கையை முன் வைத்த திரு. தில்லோன் அமெரிக்காவில் போக்குவரவுச் சீட்டு (Travel Agency) வழங்கும் நிறுவனம் ஒன்றினை நடத்தி வருவதாகவும், பாகிசுதானுக்கும் அமெரிக்காவுக்குமிடையே சென்று வந்து கொண்டிருப்பதாகவும், அந் நாடுகளின் ஏவுதலுக்கு உட்பட்டே திரு. தில்லான் செயல்பட்டு வருகிறார் என்றும் சுட்டிக் காட்டியுள்ளார். நடுவர் அர்பான்சு சிங், சாண்டிகார் முதுநிலை மருத்துவக் கல்வி நிறுவன முன்னாளைய இயக்குநர். நேதி முதலியவர்கள் தந்நலங்களுக்காகவே அகாலிகளின் கோரிக்கைகளை ஆதரிக்கின்றனர் என்றும் எடுத்துக் கூறியுள்ளார்.

தனிச் "சீக்கிய நாடு" இயக்கம் வெளி நாடுகளில் வாழும் இந்தியர்கள் சிலரால் வழி நடத்தப் படுவதாகக் கூறி பஞ்சாப் மாநில அரசு மாவட்ட அதிகாரிகளை அவ் வியக்கத்தைச் சேர்ந்தவர்களின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து வரும்படி உத்தரவிட்டுள்ளது. "சீக்கிய நாடு" ஆதரவாளர்களுக்கு எதிராகவும் அவர்களை அடக்கவும் "தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை"ப் (NSA)

www.thamizham.net - Free E book No 7513

பயன்படுத்துவதையும் எதிர்பார்க்கலாம் என அதிகாரிகள் கூறியுள்ளனர். இருப்பினும் மாநில அரசு பொறுத்திருந்து தேவையான காலத்தில் உரிய நடவடிக்கைகளை எடுக்கவும், அதுவரை நிலைமைகளைக் கவனித்து வரவும் தீர்மானித்துளளது. அமெரிக்காவில் அச்சடிக்கப்பட்ட "சீக்கியக் குடியரசு" அயல் நாட்டு எல்லைக் கடவு (Pass Port of The Rupublic of Khalistan) சீக்கிய தனிநாடு ஆதரவாளர்களுக்கு முக்கியமான ஆதரவு அமெரிக்காவில் குடியிருக்கும் சில இந்தியர்களிடமிருந்து வருகின்றது எனத் தெரிவிப்பதாக அரசுத் தரப்பில் கூறப்படுகின்றது ஆனால் தனி நாடு இயக்கம் பாகித்தானிடம் தொடர்பு கொண்டிருப்பதை அரசுத்தரப்பில் மறுக்கப்பட்டது. சீக்கிய நாடு ஆதரவாளர்கள் வெளிநாடுகளில் செய்யப்பட்ட சீக்கிய நாடு பெயர் பொறிக்கப்பட்ட அஞ்சல் வில்லைகள் (Postal Stamps) முத்திரைகள், மடல் தாள்கள் (Seals and Letter-heads) முதலியவற்றைப் பயனபடுத்துவதும் தெரியவந்து உள்ளது. இருப்பினும், இந்த இயக்கத்திற்கு மக்களின் ஆதரவு பரவலாக இல்லாததாலும் மிகச் சில தீவிரக்காரர்களே இவ்வியக்கத்தைச் சேர்ந்திருப்பதாலும் இது தானாகவே ஒரு முடிவுக்கு வந்து அடங்கிவிடும் என அரசு நம்புகின்றது. பஞ்சாப் மாநில அரசின் வேண்டுதலின் படி இந்திய நடுவண் அரசு அமெரிக்க சீக்கிய தலைவர் திரு. தில்லான் மீண்டும் இந்தியா வராமல் தடை செய்தும், தற்போது இலண்டனில் உள்ள டா. சக்தீட் சிங் (Dr. Jagjit Singh) கின் எல்லைக் கடவை (Pass-port) முடக்கம் செய்யவும் உத்தரவிட்டுள்ளது.

**சிறுபான்மைப் பிரிவு 'அகாலி தல்'லின் தொடர் நடவடிக்கைகள்:**

ஆயினும் கடந்த ஏப்பிரல் திங்கள் 13-ஆம் நாள் சண்டிகாரில் சிறுபான்மைப் பிரிவு அகாலி தல்லினால் ஏற்பாடு செய்யப் பட்ட "அனைத்து உலக சீக்கியர்கள் கூட்டத்தில்" (The World Sikh Convention) இந்திய ஒருமைப்பாட்டினுள் அடங்கிய 'பஞ்சாப் நாடு' (Desh Punjab) என்ற ஒரு சீக்கிய நாட்டிற்கு "உலக நாடுகள்" அமைப்பில் இணை உறுப்பினர் தகுதி பெற உடனே அவ்வமைப்பை அணுகுவது என ஒரு மனதாகத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. பஞ்சாப் நாட்டைத் திரும்ப அமைப்பதற்கும், சீக்கியர்கள் பெருமையுடனும் உயர்ந்த நிலையிலும் வாழவும் இந்த முயற்சி தேவை என்ற தீர்மானம் சிறுபான்மை அகாலி தல் தலைவர் திரு. சக்தேவ் சிங் தல்வண்டி (Mr. Jagdev Singh Talwandi) தலைமையில் நடந்த இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. இம் மாநாட்டில் புது தில்லி இசுலாமியத் தலைவர் சையது புகாரியும் (Shahi Imam of Delhi's Jama Masjid Sayeed Buhkari) கலந்து கொண்டார். சீக்கியர்களின் தொடர்ந்த எதிர்ப்பையும் புறக்கணித்துச் சீக்கிய நாட்டை "இந்து" தனி சட்டத்திற்கு அடிமையாக்கி வைத்துள்ளவர் என்றும், சீக்கியர்களின் தனி அடையாளத்தைப் பாதுகாப்பதற்கும், முழு உரிமையுடன் அவர்களு

www.thamizham.net - Free E book No 7513

# அசுரர்கள்

— மா. பூங்குன்றன். அறி. இ.,க. மு.

அசுரர்கள் என்பவர் ஓர் இனத்தவர். இந்த இன மக்கள் முரடர்கள், அரக்கர்கள் என்றும் இவர்கள் எச் செயலையும் முரட்டுத் தன்மையோடு செய்வதோடு மக்களுக்குத் தீங்கு விளைவிப்பவர்கள் என்பதும் இந் நாட்டு மக்களின் எண்ணம். தொன்மக் கதைகளையும் காலப் போக்குக் கதைகளையும் படித்த—கேட்ட மக்களின் நம்பிக்கையில் இஃது ஊறி நிற்கின்றது.

திரைப்படங்களில் வரும் எதிர்த்தலைவன் போன்று, இவ் வசுரர்களும் தொன்மக் கடவுளர்களின் கதைகளில் எதிர்த் தலைவர்களாக இருந்து, கடைசியில் அழிந்தும் விடுகின்றனர். உண்மையில் இவர்கள் யார், இவர்கள் உண்மையாகவே வாழ்ந்தனரா, இவர்களுக்கு ஏன் இந்தப் பெயர் வந்தது, இவர்கள் வாழ்ந்து இறந்து போனதாகப் பல விழாக்களைக் கொண்டாடி வருகின்றனரே - இவற்றையெல்லாம் ஆராயப் புகுமுன்பே பல வியப்பான குறிப்புகள் நமக்குக் கிடைக்கின்றன.

அசுரர்கள் ஆரிய இனத்திற்கு எதிர்ப்பான இனம் என்பது மட்டும் தெளிவாகத் தெரிகின்றது. ஆரியர்கள் **'சோம'**க்கள் **'சுரா'**க்கள் ஆகிய வற்றை அருந்தும் வழக்கத்தைக் கைக்கொண்டிருந்ததால், இவர்கள் தங்களைச் சுரர்கள் என்று அழைத்துக் கொண்டனர். எனவே ஆரியர் அல்லாதவர்களை 'அசுரர்கள் என்று அழைத்தனர் என்று ஆராய்ச்சியாளர்கள் சிலர் புகல்வர்.

சுரர்கள் தங்களைத் தேவர்கள் என்று அழைத்துக் கொண்டனர். எனவே அசுரர்கள் தேவரல்லாதவர்கள் என்பதும் அவர்கள் கூற்று. ஆனால் ஆரியத் தொன்மக் கதைகளில் அசுரர் என்று பொதுவாகச் சொல்லப்படுவோரின் வரலாற்றையும் அவர்களின் இயல்புகளையும்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

டைய சமயத்தைப் பின்பற்றுவதற்குமான அடிப்படை உரிமைகள் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளன என்றும், சீக்கியர்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக கருதப்பட்டு நடத்தப் படுகின்றனர் என்றும் அத் தீர்மானம் கூறுகின்றது. தங்கக் கோயிலில் (**Golden Temple**) ஒரு வானொலி நிலையம் அமைக்க சீக்கியர்கள் விடுத்த வேண்டுகோள் ஒதுக்கப்பட்டதை இது தொடர்பாக இத்தீர்மானம் சுட்டிக் காட்டுகின்றது. எனவே தற்போதைய இந்திய அமைப்பின் கீழ் சீக்கியர்கள் தங்கள் சமயத்தை உரிமையுடன் கடைப்பிடிக்க இயலாது என இத் தீர்மானம் மேலும் கூறியுள்ளது.

நன்றி : 'தி இந்து' 29-3-81
'தி இந்தியன் எக்சுபிரசு' 13-4-81 & 15-4-81
(மதுரைப் பதிப்பு)

www.thamizham.net - Free E book No 7513

காணும் போது, அவர்கள் ஆரியருக்கு மாறுயிருந்த தமிழ் மன்னர்கள் எனக் கருத இடந் தருகிறது.

இவ்வாறிருக்க, 'அசுரர்' என்ற சொல் கழகப் பழந்தமிழ் இலக்கியங்களில் எங்கும் பயின்று வந்ததாகத் தெரியவில்லை. சமய இலக்கியங்களான சிலம்பிலும் மேகலையிலும் மட்டும் ஓரிர் இடங்களில் இடம் பெறுகின்றது. எனவே இச் சொல்லுக்கும் தமிழ் நாட்டிற்கும் எத் தொடர்பும் இல்லை அல்லது இச் சொல் தமிழிலக்கியங்களில் ஏறுமளவிற்கு முகாமை பெறவில்லை என்றே தெரிகிறது.

இனி 'அசுரம்' என்ற சொல், மிகுதிக்கும் கடுமைக்கும் பொது வாக மக்கள் வழக்கிலும் நூல் வழக்கில் சிற்சில விடங்களிலும் வழங்கி வருகின்றது.

அசுர விரைவு, அசுரக்காற்று, அசுர மழை, அசுர வேலை முதலியன மக்கள் வழக்கில் வழங்குகின்றன.

இதே போல் அசுர மணம், அசுர மருத்துவம் போல்வன நூல் வழக்கில் உள்ளன.

இதில் சிறப்பென்ன வென்றால் இவற்றில் கூறப்படும் வழக்காறுகள் தமிழ நாகரிகத்திற்கும் வாழ்க்கை நெறிக்குமே பொருந்துவனவாயிருக்கின்றன.

அசுர மணம் என்பது எண் வகை மணங்களாக உரையாசிரியர்கள் கூறுவதில் ஒன்றாயினும், கொல் வேறு கோடல், திரிபன்றி யெறிதல், வில்லேற்றுதல் முதலியவற்றை செய்து கோடல் என்னும் தமிழ் வழக்கைப் பின் பற்றியதேயாம்.

"முகையவிழ் கோதையை முள்ளெயிற் றரிவையைத்
தகைநலங் கருதுந் தருக்கினி ருளரெனின்
இவையிவை செய்தாற் கெளியண் மற் றிவளெனத்
தொகைநிலை யுரைத்த பின்றை பகைவலித்
தன்னவை யாற்றிய வளவையிற் றயங்கல்
தொன்னிலை யசுரந் துணிந்த வாறே"

(தொல். பொரு களா. 1. நச். உரை.)

"கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்
புல்லாளே ஆய மகள்". (கலித். 103).

இதைப் போன்றே அசுர மருத்துவமும் தமிழ் மருத்துவத்தின்று வேறுபட்டதன்று. அசுர மருத்துவம் என்பது கருவியால் ஆற்றும் மருத்துவம்.

"மீன்தேர் கொட்பிற் பணிக்கயம் மூழ்கிச்
சிரல் பெயர்ந்தன்ன நெடுவேள் ளூசி
நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின்
அம்புசேர் உடம்பினர்" (பதிற். 42 : 2-5)

www.thamizham.net - Free E book No 7513

"கருவியிட்டாற்றுவார் புண்வைத்து மூடார் பொதிந்து"
(நீதிநெறி. 56)

இது போன்ற தமிழ் வழக்காறுகளுக்கு அசுரம் என்ற சொல் பெயராகி நின்றது.

ஆரியப் பார்ப்பனர்களின் விழாவான விளக்கணி விழாவின் காரணியமாக நிற்கின்ற 'நரகாசுரன்' என்ற அசுரனும், முருகனால் கொல்லப்பட்ட 'பத்மாசுரன்' என்ற அசுரனும் கீழானவர்களாக வண்ணிக்கப் படுகின்றனர். இலங்கை வேந்தன் இராவணனையும் அசுரன் என்றே கூறுகின்றனர்.

ஆனால் தொன்மக் கதைகளில் அசுரர் என்பவர்களை ஆரியர் அல்லாதவர் — தேவரல்லாதவர் — தேவரிடத்தினின்று வேறு பட்டவர் என்றுதான் குறித்துள்ளனரே தவிர, கொடுமையானவர்க ளாகவும் கீழானவர்களாகவும் குறித்ததாகத் தெரியவில்லை.

இச் சொல்லுக்கு, பி. எசு. சுப்பிரமணிய (சாத்திரியா)ர் தம் வட மொழி நூலில்,

" அஸுர என்ற சொல் வலிவுள்ளவர் என்ற பொருளோடு அக்கினி, இந்திரன், ஸோமன், வஸுக்கன், மித்திராவருணர் முதலியோர்க்கு அடைமொழியாக வழங்கப்பட்டது.

சில விடத்து வலிவைக் கொடுப்பவன் என்ற பொருளையும் கொண்டது. தேவரல்லாதார்க்கும் அஃது அடைமொழியாக வழங்கப் பட்டுள்ளது. தேவரல்லாதார் என்பது தேவரைப் போன்ற வரும் தேவரிடத்தினின்று வேறுபட்டவருமானவர்களைக் குறிக்கும்.
(வ. நூ. வ. பக். 43-46)

இவரே தம் நூலில் மறை (வேதங்)களில் அசுர என்ற சொல் லுக்கு வழங்கும் பொருளையும் குறித்துள்ளார்.

"அஸுர என்ற சொல் ருக்வேத ஸம்ஹிதையில் பலமுடையவர், உயிர் கொடுப்போன் என்ற பொருளில் வழங்கப் பட்டது. சில விடத்துத் தேவருக்குப் பகையினன் என்ற பொருளிலும் அச் சொல் வழங்கப் பட்டுள்ளது. ஆனால் இப் பொருளில் கூறப்படும் மந்தி-ரங்கள் பிற்காலத்தன என்று கொள்ளல் தகும்". (ஷை பக். 105-6)

இதற்கு மேலாக ஆரிய இனம் என்பது உலகின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் தன்னினத்தைப் பிறப்பின் முதலா உயர்த்தி, மற்று இனம் எவ்வளவுதான் உயர்ந்திருப்பினும் தாழ்த்திப் பேசும் பண்பு கொண்டதாகவே இக்கால அறிவியல், குமுகாய முன்னேற்றத் திடை யேயும் இருக்கிறது என்றால் முற்காலத்து அதன் ஆட்சி எவ்வகைப் பட்டதாக இருந்திருக்க வேண்டுமென்று தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.

www.thamizham.net - Free E book No 7513

இனி. ஆரிய வரலாற்றை ஒரு தொடர்களில் சுருங்கக் கண்டால், அசுரர்கள் யார் என்பதைப் பற்றிய ஓர் உருவம் நமக்குக் கிடைத்து விடும்.

ஆரியர்கள் நடுவண் ஆசியத்தைத் தங்கள் பிறப்பிடமாகக் கொண்டவராவர். அங்கேயே தங்களின் மதக் கொள்கை, வழிபாடு, பண்பாடு இவற்றை அமைத்துக் கொண்டவர்கள். அவ்விடத்திலேயே இவர்களுக்குச் சற்று வேறுபட்ட இனம் ஒன்று இருந்திருக்கின்றது. முதற் காலத்தில் அவ் விரண்டு இனங்களுமே தங்களைக் கடவுளினம் என்று கருதியிருக்கின்றன. தங்களைத் தேவர்கள் என்று கூறியிருந்திருக்கின்றன. பிறகு படிப்படியாக ஒன்றையொன்று எதிர்த்து ஓரினம தங்களைத் தேவர்கள் என்றும், மற்றொன்று தேவரல்லாத தாழ்ந்த இனம் என்றும் கூறிக் கொண்டன அக்கால் அங்கு வாழ்ந்த ஆரிய இனத்தின் எதிர் இனம்தான் அசுர இனம். இவ்வாறு இவர்களுக்கு இடையில் பகைமை தோன்றிய பின் இரு இனங்களும் பல்வேறு திக்குகளிலும் பிரிந்து சிதறின.

அவ்வாறு பிரிந்த ஆரிய இனம் இந்தியா, ஈரான் முதலிய இன்றைய பெயருள்ள பகுதிகளுக்குள் நுழைந்தனர். இந்தியாவில் நுழைந்த ஆரியர்கள் இந்து மதம் ஒன்றை அமைத்து இந்துக்கள் ஆயினர். ஈரான் நாட்டில் நுழைந்தவர்கள் முகமதிய மதத்தை உருவாக்கினர்.

அங்கு வாழ்ந்த அசுர இனம், அக்கால மெசப்பட்டோமியா பகுதியில் நுழைந்து அசுர் எனற நகரத்தைத் தோற்றுவித்து அசீரியா என்ற கடவுளை வணங்கிப் பின் அசீரியா என்ற நாட்டையும் உருவாக்கினர்.

இவை யனைத்தும் ஆரிய வரலாற்றைச் சார்ந்த வியப்பான குறிப்புகளாகும். இவற்றிற்கு அடிப்படைச் சான்றாக ஆங்கிலக் கலைக் களஞ்சியத்தின் குறிப்புகளையும் இங்கு நோக்குவது நன்று.

ASURA, in Hindu mythology, a class of titans or demons, the enemies of gods and of men. In the Vedic age the ASURAS and the DEVAS were both. Considered classes of gods but gradually the two groups came to oppose each other, a development that was reversed in Iran. (The asura, or ahura, came to mean the supreme god and the devas, or daivas, become demons). In Hindu mythology, the asuras and devas together churned the milkly ocean, in order to extract from it the amir a the elixir of immortality. Strife arose over the possession of amirta, a conflict that is never ending. (Encyclopedia Britannica. P. 610).

www.thamizham.net - Free E book No 7513

ASHUR, in Mesopotamian religion, city of Ashur and national gcd of Assyria. In the begining he has perhaps only a local deity of the city that shared his name. From about 1800 B. C. onward, however there appears to have been strong tendencies.

..... It has to be studied indirectly on the basis of later documents and by a comparative approach. The language of Iran is closly akin to that of northern India, and hence the people of the two lands probably had common ancestors - the Indo - Iranians, or Aryans. The religion of the later has been reconstructed by means of common elements contained in the sacred books of Iran and India: mainly the Avesta and the vedas. Both collection exhibit the same Kind of polytheism, with many of the same gods, notably the Indian Mithra (the Iranian Mithra) the cult of fire, sacrifice by means of a sacred liquior (SOMA in India, in Iran HAOMA), and other parallels There is moreover, a list of Aryan gods in a treaty concluded about 1380 B C. ........ —

—.... the list includes Mitra and Varuma, Indra, and the two Nasatyas All those gods also are found in Vedas, but only the first one in the Avesta, except that Indra and Nanheithya appear in Avesta as demons, Varuma disappears but may have survived under another name ......

......... asura come to signify, in Sanskrit a king demon, because of the baleful aspect of the asura's invisible power. In Iran the evolution must have been different: the ahuras were extolled, to the exclusion of the daevas, who were reduced to the rank of demons. (Ency. Brit. 19 ; 1171e).

இவற்றின் நாம் அறியும் குறிப்புகள் :

அசுரர் என்ற இனம் நடு ஆசியாவில் ஆரியர்களோடு வாழ்ந்த ஆரிய எதிர்ப்பினம்.

அசுரர்களை எதிர்ப்பு நிலையில் பார்த்த ஆரியர்கள் பின்பு அவர்கள் சென்ற இடமெல்லாம் தாங்கள் கண்ட எதிர்ப்பினங்களை அசுரர்கள் என்றே வழங்கினர். அதனால் உண்மையில் அவர்கள் கூறிய அசுரர்கள் அனைவரும் அசுர இனம் அல்லர்.

தங்கள் தொன்மக் கதைகளிலும் கட்டுக் கதைகளிலும் தங்கள் எதிர்ப்பினங்களை நுழைத்து இழிவு படுத்தி அவர்களுக்கு அசுரர்கள் என்ற பெயரையும் சூட்டி வைத்தனர்.

www.thamizham.net - Free E book No 7513

சுரர் என்பது ஆரிய இனமாக இருக்கலாம். ஆனால் அப் பெயரால் இன்று ஆரிய இனமல்லாதவர்களை (அசுரர்) எனறே அழைப்பது என்பது அத்துணைப் பொருத்தமாகத் தோன்றவில்லை. ஏனெனில் அசுரர் என்பதே இனத்தின் பெயராகத் தோன்றுகிறது.

அசுரம் என்ற சொல் தமிழில் வேறு பொருளும் வேறு வேரும் அமைந்த தென் சொல்லாக இருக்க வேண்டும். அல்லாக்கால் அசுரர் உடல், செயல் அமைப்புகளைக் குறித்து ஆரியர்கள் மிகைத்து கூறின வற்றின் வழிவந்த உருவாக்கச் சொல்லாக இருக்கலாம்.

நரகாசுரன், பத்மாசுரன் போன்றோர் ஆரியர்களின் நுழைவின் போது எதிர்த்த பேரரசர்களாகவும், சிற்றரசர்களாகவும் இருந்திருக் கலாம்.

o

## உ. த். மு. க. தொடக்க மாநாடு.

### சென்னை, பெரியார் திடலில் நடைபெறும்

### (துலை உஉ, உ௩ (நவம்பர் 7-8.)

உ. த. மு. க. மாநாட்டுப் பணிகள் சிறப்புற நடைபெற்று வருகின்றன. மாநாடு மிகவும் சிறப்பாகவும் பயனுள்ளதாகவும் அமைய வேண்டும் என்னும் வகையில். தமிழ்மொழி வளர்ச்சி, தமிழின முன்னேற்றம், தமிழ்நாட்டு நலம் ஆகியவற்றில் பெரிதும் ஆர்வம் கொண்ட, ஈடுபாடு கொண்டு உழைக்கும் அனைத்து அறிஞர்களும் கட்சித் தலைவர்களும் அமைச்சர்களும் வேறுபாடின்றி மாநாட்டில் கலந்து கொள்ள அழைக்கப் பெற்றுள்ளனர். சிலரிடமிருந்து மாநாட்டில் கலந்து கொள்ள விருப்பம் தெரிவித்து மடல்கள் வந்து உள்ளன. பலரிடமிருந்து மடல்கள் எதிர்பார்க்கப் பெறுகின்றன.

தென்மொழி அன்பர்கள் தங்கள் குடும்பத்துடன் கட்டாயம் மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம். மற்றும் ஆங்காங்குள்ள தமிழன்பர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் அன்புடன் மாநாட்டில் கலந்து கொண்டு, தமிழின முன்னேற்றத்திற்கு வழி வகுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். அவர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மாநாட்டுத் தொடர்பான விரிவான அறிக்கைகள் அடுத்து வரும் தென்மொழி இதழ்களில் வெளிவரும்.

**மருத்துவர். கோவிந்தனார்,**
வரவேற்புக்குழுத் தலைவர்.

**புலவர். இறைக்குருவனார்,**
வரவேற்புக்குழுச் செயலர்.

www.thamizham.net - Free E book No 7513

# உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க மாநாடு.

## நன்கொடை தண்டுவது பற்றி அன்பர்களுக்கு ஓர் அறிவிப்பு.

உ. த. மு. க. தொடக்க மாநாட்டுத் தொடர்பாக, நன்கொடை திரட்டுவதற்கான 20 தாள்கள் கொண்ட பற்றுமுறிச் சுவடிகளும் அறிக்கைகளும் ஆங்காங்குள்ள தென்மொழி அன்பர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் கடந்த மாத இறுதிலேயே அனுப்பப்பட்டுள்ளன. அன்பர்கள் நன்கொடைகளைத் திரட்டத் தொடங்கியிருப்பார்கள் எனக் கருதுகின்றோம். அறிக்கைகள் போதவில்லையானால் தேவையானவர்கள் தங்கள் முயற்சியிலேயே அடித்துக் கொள்ளலாம். இல்லெனில் தென்மொழிக்கு எழுதலாம். விடுக்கப்பட்ட பற்றுமுறிச் சுவடி தீர்ந்து விட்ட நிலையில் மேலும் நன்கொடை திரட்ட விரும்பினால், உடனடியாக அலுவலகத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். அக்கால், அவர்கள் ஏற்கனவே திரட்டியுள்ள தொகையினையும் தீர்ந்துபோன பற்றுமுறியின் அடிக்கட்டையினையும் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்து விடுதல் வேண்டும். எப்படியும் திரட்டப் பெறும் நன்கொடைகளை செப்டம்பர் இறுதிக்குள் அனுப்பி வைப்பது நல்லது. பணி எஞ்சுமானால் அக்டோபர் 15-க்குள் கட்டாயம் அனுப்பி விடக் கேட்டுக் கொள்கிறோம்.

புதிதாக நன்கொடை திரட்டும் விருப்பமுள்ள அன்பர்கள் அலுவலகத்திற்கு எழுதிப் பற்றுமுறிச் சுவடிகளைப் பெற்றுக் கொள்ளலாம். வெளியிடப் பெற்று, அமைப்பாளர் கையொப்பமும் அலுவலக முத்திரையும் வைக்கப் பெற்ற பற்றுமுறிச் சுவடிகளிலேயே நன்கொடைகள் தண்டப்பெறுதல் வேண்டும். வேறு முறைகளில் தண்டப் பெறும் நன்கொடைகளுக்கு அலுவலகம் பொறுப் பேற்றுக் கொள்ளாது என்பதை அன்பர்கள் உணர்தல் வேண்டும்.

மாநாடு நடத்தவும், கழகம் அமைக்கவும், கழகத்திற்கென்று செய்தியிதழ் தொடங்கவும் வேறு தொடர்ந்த பணிகளுக்கும் மிகுந்த அளவில் தொகை திரட்டப் பெற வேண்டியிருப்பதால், அன்பர்கள் இவ்வகையில் நிறைந்த ஆர்வமும் அக்கறையும் காட்டித் தண்டல் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். நன்கொடைகளை அன்பு முறையாலன்றிக் கட்டாய முறையில் தண்ட வேண்டா என்றும் வேண்டிக் கொள்கின்றோம்.

**பெருஞ்சித்திரனார்.**
அமைப்பாளர்.

www.thamizham.net - Free E book No 7513

# உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்.
## வரவேற்பும் வாழ்த்துகளும்.

### வாழ்நாள் கனவு நிறைவேறுகிறது!

மடல் கண்டு மகிழ்ச்சி. என் வாழ்நாள் கனவான உ.த.மு.க. தொடக்க மாநாட்டின் இரண்டாம் நாள் முற்பகல் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள மகிழ்வுடன் இசைவு தெரிவிக்கிறேன் ... கூட்ட நேரத்தில் ஆவலுடன் காத்து ஒருவராயிருப்பேன்.

பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார், சென்னை-18.

### நல்ல பணி. வாழ்த்துகிறேன்!

.. உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க விழா அழைப்பு வரப்பெற்றேன். நல்ல பணி. தொடங்குங்கள். விழா இனிது நடைபெற வாழ்த்துகிறேன். -

முத்தமிழ்க் காவலர். கி. ஆ. பெ. விசுவநாதம், திருச்சி-8.

### அவா நிறைவேறும் என நம்புகின்றேன்!

.. தாங்கள் அமைத்து ஆற்றலூட்டிவிடத் திட்டமிடும். உ. த. மு. க. தொடக்க மாநாட்டில் கலந்து களித்து, உரையாற்றி உவப்பதற்கு எனக்கும் ஒரு வாய்ப்பளிக்கும் தங்களுக்கு நன்றி கூறுகிறேன்.

தமிழ், தமிழினம், தமிழகம் இவற்றின் நலம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, செயலாற்ற வேண்டிய அறிஞர்கள், ஏதேதோ ஏதுக்களால் பிளவுபட்டுச் செல்வதைத் தடுத்து நிறுத்தி, அவர்களைத் திசைப் பெறுத்தி, ஒன்று கூடி உழைக்கச் செய்யவும் இந்தப் புது நிறுவனம் உதவி புரியும் என்னும் எனது அவா நிறைவேறும் என நம்புகிறேன் ......

இப் பணியில் தங்களுக்கு உறுதுணையாய் நிலைநின்று, அலுவல்களைப் பகிர்ந்து கொள்ளும் பண்பாளர்களின் பட்டியலைத் தங்கள் அன்பு மடலில் காண்கின்றேன். அந்தத் திறலர் ஒவ்வொருவருக்கும் என் அன்பும் வணக்கமும்.

ஆட்சிமொழிக் காவலர். கீ. இராமலிங்கனார், சென்னை-30.

### மிகவும் பாராட்டத்தக்க முயற்சி!

.. தாங்களும் தோழர்களும் மேற்கொண்டுள்ள தமிழினக் காப்பு முயற்சி மிகப் பாராட்டத் தக்கதாகும் மிகவும் மகிழ்ச்சியும் நன்றியும் ... — வே. ஆனைமுத்து, 'சிந்தனையாளன்', திருச்சி-2.

### உலகத் தமிழர் உணர்வுகளுக்கு ஒரு வாய்க்கால்!

... இவ்வுலகத்துப் பரந்து வாழும் எண்கோடித் தமிழர்தம் உணர்வுகளுக்கு ஒரு வாய்க்காலாக இக் கழகம் அமைந்திடல்

www.thamizham.net - Free E book No 7513

வேண்டும். அல்லலுறும் தமிழர்தம் துயர் நீக்க அயராது உங்களின் வழி உழைத்திட என்றும் கடப்பாடுடையேன் ...

— **மு. பழ. சதாசிவம்**, சேலம்-6.

### தாழ்ந்த தமிழகம் உயரட்டும்!

... நம்மின முன்னேற்றத்திற்காகத் தாங்கள் மேற்கொள்ளும் எந்தச் செயலுக்கும் என்னால் இயன்ற உதவிகளை நான் செய்யக் காத்திருக்கிறேன் ... தங்களின் முயற்சியால் பெயரிழந்து வரும் தமிழகம் மீண்டும் உயரட்டும்; ஓங்கட்டும்! என்றும் தமிழின் உயர்வும் தமிழனின் உயர்வையும் விரும்புகின்ற தமிழன் ...

— **நா. நடத்தரசன்**, மேல நெம்மேலி.

### ... முயற்சி தேவையானது!

... இன்றைய நிலையில் தங்கள் முயற்சி தேவையானதுதான். ஆயின் நம் பணி மிகவும் முடுக்கமாக இருத்தல் வேண்டும்; முயல்வோம்!

— **நாவை. சிவம்**, மணப்பாறை.

### உ. த. மு. க அமைவது சாலப் பொருத்தமே!

.. தங்கள் முயற்சி பாராட்டுக் குரியது. யான் எனது முழு ஒத்துழைப்பையும் நல்க ஆயத்தம். தங்களின் சீரிய தலைமையில் தமிழின முன்னேற்றக் கழகம் அமைவது சாலப் பொருத்தமே! யான் தங்களது கொள்கையை முழுமையாக ஏற்கிறேன். ஏனெனின் எனது பாட்டனார் பேராசிரியர் மறைமலையடிகளாருக்குப் பின், தமிழ், தமிழின முன்னேற்றத்திற்கு உண்மையாகப் பாடுபடுவோர் இன்மையைத் தாங்களே நிறைவேற்றுவோராக அமைதல் காண்கின்றேன். யானும் என் இல்லத்தாரும் தங்கள் இயக்கத்தில் முழு ஈடுபாடு கொள்ள ஆயத்தம் ...

— **ச. கிள்ளிவேள்**. க. மு. இலுப்பூர்.

### திட்டமிட்டுத் தொடங்குங்கள்!

... அறிக்கை வரக் கண்டு மகிழ்ந்தேன். உ. த. மு. க. வைத் திட்டமிட்டுத் தொடங்குங்கள். மொழி, இன, நிலப்பற்று உடையாரையும் கட்சியாளரையும் தழுவிப் போகும் முறையில் அமைத்துப் பாடாற்றுங்கள். பயிற்றகம் தன் பங்கைச் செலுத்தும்.

— **த. ச. தமிழன்**, திருவாரூர்.

### ஆறுதலளித்தது!

... மகிழ்ச்சி. ஈழத்தில் நம்மினம் இழிவிற்கும் அழிவிற்கும் உட்பட்டு உழலும் வேளையில் குமையும் நெஞ்சிற்கு உ.த.மு.க. தொடக்க அறிக்கை சற்று ஆறுதலளித்தது! அடியார் போன்றோரை அருகே நெருங்க விடாதீர்கள். நெருக்கடி நேரங்களில் கூலிக்கு விலையாகிப் போவர். தன்மானம், தமிழ் மானம், மண்ணின் மானம் ஒன்றென உயிரெனச் சிதைவுறும் வேளை சீறியெழும் அரிமாக்கள் ஆங்காங்கே வாழ்ந்து வருவர். வாய்ப்பும் வேளையும் கூடிவரும் போதுதான், தன் பெண்டு பிள்ளையெனும் சுமை துறந்து ஓடி வருவர். உ.த.மு.க.

www.thamizham.net - Free E book No 7513

தன்மான இயக்கமாக வளர்வதை விரும்புகிறேன். வாழ்த்துகிறேன் !

— **ச. கலியமூர்த்தி**, காவேரி நகர், புதுக்கோட்டை மாவட்டம்.

### உறுதுணையாக இருப்பேன் !

... உ. த. மு. க. தொடக்க மாநாட்டில் அகத்தியம் என் குடும்பத்துடன் கலந்து கொள்வேன். மற்றும் தங்களின் நன்முயற்சிக்கு நான் என்றும் உறுதுணையாக இருப்பேன் என்ற உறுதியினை இதன் வழி தெரிவிக்கிறேன்.

— பேரா. **முத்து. குணசேகரன்**, க. மு. கடலூர்-1.

### முழு ஒத்துழைப்பும் நல்குவேன் !

... தாங்கள் தொடங்கவிருக்கும் கழகத்தில் நான் முழுவதுமாக என்னை இணைத்துக் கொள்ள அணியமாக இருக்கிறேன். இயக்கத்தினை இங்குப் பரப்பிட எனக்கு உத்திரவு வழங்கப்படுமாயின் அப்பணியினை ஏற்றுச் சிறப்புடன் நடத்திட முழு ஒத்துழைப்பையும் நல்கிய உள்ள நிறைவுடன் இருக்கின்றேன்.

— **மா. செயபால்**, ஆலூர், தஞ்சாவூர்.

### அரிய தொண்டு என்றும் உண்டு !

... தமிழின முன்னேற்றக் கழகத்திற்கு என் அரிய தொண்டு என்றும் உண்டு. மாநாட்டிற்கு வருகை தருகிறேன்.

— புலவர். **சி. தமிழ் மாறன்**, முதல்வர், செந்தில் தனிப்பயிற்சிக் கல்லூரி, திருவண்ணாமலை.

### துணை புரிவேன் !

... உ. த. மு. க. தொடக்க மாநாடு நடைபெற விருப்பதை அறிந்து அக மகிழ்ந்தேன் ... மாநாடு நடப்பதற்கும், இயக்கத் தொடக்கத்திற்கும் துணை புரிகின்றேன் என்பதை இம் மடல் வாயிலாகத் தங்கட்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

— புலவர் **பழ. செல்வன்**, கொடியாலம்.

### நல்ல பயனைக் கொடுக்கும் !

— தங்கள் முயற்சி சிறப்பு மிக்கது. வெற்றி வாய்ப்புகள் உண்டு. நல்ல பயனைக் கொடுக்கும்.

— **இரா. கத்தூரி**, வழக்கறிஞர், கோவை-2.

### வினைவழித் துணை நிற்பேன் !

— இயக்கத் தொடக்கத்திற்கும் மாநாட்டிற்கும் வினைவழித் துணை நிற்க விழைகிறேன். — **மு. க. சங்கிலி**, திருப்பராய்த்துறை.

### கரு உண்டாகி விட்டது !

... ஓர் இயக்கத்திற்கான கரு உண்டாகி விட்டது. அஃது இயற்கைத் தாயின் வயிற்றில் தானகவே வளரும் ; உருவாகி உலகில் உலவும் ; ஆள வேண்டியதை ஆளும் என்பது திண்ணம் ! எனினும் நம் எண்ணம் நாம் வாளா இருக்க வேண்டுமென்பது அன்று. நாம்

www.thamizham.net - Free E book No 7513

செய்ய வேண்டிய வழி முறைகளையும் பெருங் கடமைகளையும் செய்தாகல் வேண்டும் என்பதே! இவை அனைத்தையும் தாங்கள் அறியாதவரல்லர். தாங்கள் இது பற்றி ஆய்ந்து நல்லதொரு முடிவை மேற்கொள்வீர்களாக என உள்ளன்புடன் வேண்டிக் கொள்கின்றேன்.

'உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்' எனும் பெயர் கண்டு மிக்க மகிழ்ச்சியடைந்தேன். 'தமிழின' எனும் சொல் மிக்க அழுத்த முடைய சொல்லாக இருப்பதைக் காண்கிறேன். அவ்வாறே அதை யடுத்து 'முன்னேற்றம்' என்னும் சொல்லும் அமைந்திருப்பது வரவேற்றற் குரியதே! மேலும் மங்கலச் சொல்லான — தமிழிலக்கியங்கள் சிலவற்றின் தொடக்கச் சொல்லான — 'உலகம்' முதற் சொல்லாக, 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்ற புறநானூற்றடிக்கு அரண் செய்வதாக அமைந்துள்ளது போற்றற்குரியதாம்!

இத்தகைய மங்கலச் சொல்லால் உ. த. மு. க. திங்கள் போல் வளர்ந்து தங்கமென ஒளிரும்; திங்களினும் மீறிய நிலைப்பாற்றல் கொண்டு வளர்ந்தபின் தேய்வுறாது, தமிழ்த்தாய் உருவாய்ச் சீருறும்; ஆல் போல் அகலுறும்; நாள்தோறும் பொலிவுறும். இது திண்ணம்! ஆம் உள்ளக் கனலை அடக்கி, மெல்லக் காற்றுயிர்க்கும் உரம் பெய்த நெஞ்சுடை மறத்தமிழர் ஒவ்வொருவரின் எண்ணம்!

'உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்' பேச்சளவில், எழுத்தளவில் கொள்கைகளைக் கொண்டதன்று; செயலளவில் நின்று வெற்றி காணும் ஒன்று' என உலகம் வியக்க நடத்திச் செல்வோம்! அணியமென அனைத்துத் தமிழ் மறவர்களின் ஆர்க்கின்ற அரிமாக் குரலொலி அண்டம் பிளக்கிறது; எம் செவியில் விழுகிறது; உள்ளம் குளிர்கிறது; நாடி நரம்புகளில் ஒரு புத்துணர்வு புகுந்தோடி நெஞ்சினை நெகிழச் செய்கிறது! உடல் இரும்பாகிறது! கொள்கை கரும்பாகிறது! 'ஐயா, என்ன செய்ய வேண்டும்! கட்டளையிடுங்கள்' — எங்கள் உளம் கேட்கிறது.

— புலவர். ப. எழில்வாணன், இல. இ; பள்ளப்பட்டி.

### பெயரே கட்டியங் கூறும்!

.. ஐயா, தென்மொழி வழி நமது இயக்கத்திற்கு, 'உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்' என்பது பெயரென்று அறிந்தேன். மிகவும் பொருத்தமான பெயரேயாகும். எதிர்காலத்தின் தமிழினத் தேவைகளை உறுதியாக இப் புதுக் கழகம் விளைவித்துத் தரும். தாங்கள் எண்ணுவது ஈடேறுவதற்கு இப் பெயரே கட்டியங் கூறும்...

— கு. இராசேந்திரன், ஆய்வாளர், அண்ணாமலை நகர்.

### ஏற்புடைத்தாகும்!

... சூழ்நிலைக் கேற்ப, தமிழ்மொழியையும் இனத்தையும் காப்பதற்கென ஓர் இயக்கத்தைத் தோற்றுவித்திருப்பது ஏற்புடைத்

www.thamizham.net - Free E book No 7513

தோன்றுகும். தங்களின் இம் முயற்சிக்குப் பெரிதும் மகிழ்ந்து உதவ விழைகின்றேன் ... — ந. சுப்பையா, இலாடபுரம். (திருச்சி).

### மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

புதிய கட்சி தொங்குவது பற்றி மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். என்னைத் தொண்டனுக அக் கட்சியில் இணைத்துக் கொண்டேன் ... — சி. பாண்டியன், தொட்டிக்குளம்.

### மலரட்டும் தமிழின முன்னேற்றம்!

... உ. த. மு. க. தொடக்க மாநாடு பற்றிய அறிவிப்பு கண்டு மகிழ்ந்தேன். படித்துப் பட்டம் பெற்ற தமிழ் மக்களிடம் மட்டுமின்றி, படிக்காத பொதுநிலைத் தமிழர்களிடமும் தங்கள் இயக்கத்தின் குரல் எதிரொலிக்கப் பெற்றுல்தான், தமிழின முன்னேற்றம் என்பது அடுத்த தலைமுறையிலாவது நனவாகும். என்னைப் பொறுத்தவரைத் தாங்கள் இந்தத் தலைமுறையின் இளைஞர் குழாத்தினை நன் முறையில் ஆற்றுப் படுத்தும் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதைப் பெரிதும் வரவேற்கிறேன். சுருக்கமாகக் கூறின், தமிழகத்தின் சந்து முனைகளில் எல்லாம் தமிழின முன்னேற்றச் சிந்தனைகள் ஒலித்து — எதிரொலிக்கப் பட வேண்டும். அதற்குரிய காலம் கனிந்து வருகிறது. சரியான தலைமைதான் கிட்டவில்லை. தங்கள் மூலம் அந்தத் தலைமை அமையுமேயாறுல், தமிழ்மொழி, அரசியல், பண்பாட்டுத் துறைகளில் உறுதியான சில மாற்றங்கள் ஏற்படும். மாவட்ட நடுவண் நூலகக் கட்டிடத்தில் மட்டும் முழங்கும் முழக்கங்கள் முன்னேற்றத்திற்குப் போதா. சாக்கிரடீசு காலம் போன்று, சந்து முனைகளிலும் தமிழ்ச் சிந்தனை மலர வேண்டும். அதற்குரிய திட்டங்களை வகுத்துச் செயல்பட வேண்டுகின்றேன். தமிழ் மொழி — இனத்தின் தனித் தன்மையை உறுதிப் படுத்தும் — தன்னேரில்லாச் சித்த மருத்துவக் கலையின் வழி — தங்கள் திட்டத்திற்கு உறுதுணையாய் என்றும் இருப்பேன். ... 'உலகத் தமிழின முன்னேற்றக் கழக அமைப்பு' காலங் கருதித் தாங்கள் ஆற்றிவரும் அரிய பணிகளில், தலைசிறந்த பணியாகும்!

வளரட்டும் தங்கள் முயற்சிகள்! மலரட்டும் தமிழின முன்னேற்றம்! — க. வேங்கடேசன். க. மு. 'மூலிகை மணி' சென்னை-30.

### செயற்பாடுகளை வடிவப் படுத்தவும்!

— மொழி, இனம், நாடு என்ற முறையில் நம் உரிமையை வலியுறுத்த வேண்டியது ஒவ்வொரு தமிழனின் உடனடிக் கடமையாகிறது என்பதை முழுவதும் உணரும் ஒருவன் நான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டு நிலை பற்றிய நம் வேட்கையை இயக்க வடிவில் இயலா நிலை குறித்து ஏற்கனவே பேசியுள்ளோம்.

www.thamizham.net - Free E book No 7513

அதை யுள்ளி நம் செயற்பாடுகளுக்கு வடிவம் தர வேண்டுகின்றேன். உங்கள் முயற்சிக்கு என் ஒத்துழைப்பு என்றும் உண்டு; வெல்க

— கு. வெ. கி. ஆசான், கோவை-2.

**ஓர் அறிவாண்மை இயக்கம் மிகமிகத் தேவை.**

... அரசியல் எத்துப் புரட்டுகளும், அறியாமை வணிகமும் மிகுந்து விட்ட இந்த நாளில், தமிழ் மக்களை வழி நடத்திச் செல்லக் கூடிய ஓர் அறிவாண்மை இயக்கம் மிக மிகத் தேவையாகும். இத் தேவையை நிறைவு செய்யும் நோக்கங் கொண்டு, ஓர் இயக்கம் தோன்ற விருப்பது முன்னேற்றத்தின் அறிகுறியாகும். மாநாட்டில் கலந்து கொள்வேன். தவறாமல் கலந்து கொள்வேன். தாங்கள் கூட்டும் மாநாட்டில் கலந்து கொள்வது இனிப்புக் கட்டியை எடை பார்க்காமல் எடுத்துச் சாப்பிடுவதைப் போல.

— புலவர். **நெடுமிடல்**, கடத்தூர்.

**தொய்வை ஈடுகட்ட வேண்டும்!**

... இழந்துபட்ட பண்டைப் பெருமை, நம்மின் வலிமை பொருளியலில் நாம் பெற்று விட்ட பின்னடைவு, மொழியியல் வீழ்ச்சி இன்னும் பலப்பல வகைகளில் நாம் பெற்ற தொய்வை ஈடு கட்ட வேண்டுமெனில் தனித்தமிழகம், அதன் வழியாகத் தனித் தமிழின் நல்லாக்கம் இவையெல்லாம் உருவாக்கப் பெறல் வேண்டும். தாங்கள் இனிவரும் நாளில் இடும் கட்டளை எதுவாயினும் அன்போ டேற்றுத் தொண்டாற்றக் கடமைப்பட்டவன். தங்களின் கடைசித் தொண்டன் எனும் முறையில் நான் பெறும் நிறைவு அளவிடல் முடியாது. வாய்ப்பிருப்பின் தென்மொழிக்கும் இனத்திற்கும் உயிர் துறக்கவும் விரும்பும் ...

— **வெ. மகராசன்**, வளையபட்டி

**இன்றியமையாதது; காலத்தின் கட்டாயம்!**

... தாங்கள் தொடங்கவிருக்கும் உ. த. மு. கழகம் இன்றியமை யாதது. காலத்தின் கட்டாயம். உணர்வுடையோர் இணையட்டும். உணர்விலாதார் ஒழியட்டும். நான் தி. மு. க. வெறியன். இருப்பினும் தங்கள் தூய பணியை வரவேற்கின்றேன். வெற்றி தொலைவில் எனினும் வழிச்செலவு இன்றியமையாதது. என்னால் இயன்றவரை ஒத்துழைப்பேன் ...

— **சி. இறையரசன்**, சின்னதாராபுரம்.

**உதவ விரும்புகிறேன்; வாழ்த்துகிறேன்!**

.... 'உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்' தொடக்கமாகும் செய்தியறிந்தேன் ... இயன்ற வழி கழகம் இயக்க முற உதவவும் விரும்புகின்றேன். இயக்கம் ஏழ் துறையில் திட்டமிட்டுச் செயற்பட வாழ்த்துகின்றேன். ஆண்டுகள் பலவாயின. தூண்டுவாரின்றிக் கிடந்த தமிழர் உண்மை ஆர்வத்தைத் தூண்டி வருவதில் முன் நிற்கின்றீர்கள். நன்றி. தங்கள் இயக்க வுணர்வின் வீச்சிலிருந்து விலகி நின்றபின் மீண்டும் அந்த வட்டத்திற்குள் வரும் காலம்

www.thamizham.net - Free E book No 7513

வந்துள்ளது. ஆக, நாம் பெற்ற படிப்பினைகளைச் சீர்காண்பதற்குரிய காலம் இஃதெனவும் ஓர்க. அதனாலேயே, சரியான திசை புலப்படும். இருட்டையும் ஒளியையும் வேறுபடுத்திக் காண்பதில் உள்ள இடர்ப்பாட்டை இந்த 'தன்னேருக்குப்பார்வை' களையும் என நம்புகின்றேன்.

சாதியெனும் 'சக்கரத்தின்' பல்லிடுக்கில் பட்டவர்களையும், பதவியதிகாரத்தில் தன்மானத்தைப் பலி தந்தவர்களையும், குமுகாய அமைப்பின் ஓட்டத்தின் பின்னே ஓடிச் சலித்தவர்களையும் எண்ணிப் பார்க்கிறேன். அங்கெல்லாம் 'நான்' நின்றேறு என்றும் துருவிக் காண்கின்றேன். சிலவற்றைச் சொல்லவும் நாணுவேன்; பலவகையில் பெருமையும் பீற்றிக் கொள்வேன். ஆயினும், எள்முனையும் ஏற்றம் பெறமுடியாத நிலைமை—தாழ்வு—தமிழர்க்குள்ள தெண்ணித் தலைகுனிகின்றேன் ... — **பறம்பை அறிவன்**, பரமக்குடி.

**...புதியதோர் இயக்கம் தேவைதான்!**

... அறிக்கை கண்டேன்; அக மிக மகிழ்ந்தேன் ... தாங்கள் குறிப்பிட்டுள்ளது போன்று மாறுபட்டு வரும் அரசியல் சூழ்நிலைகளிலிருந்து வேறுபட்டு வரும் தமிழினத்தைக் கட்டிக் காக்க — மேம்படுத்த — புதியதோர் இயக்கம் தேவைதான். அதிலும் தாங்கள் போன்ற தமிழ்மறவர்கள் இதுபோன்ற அமைப்புக்குத் தலைமையேற்றல் தகவுடைத்து. முயற்சிக்குப் பாராட்டுகள். முழுமனத்துடன் இதில் என்னை ஈடுபடுத்திக் கொள்ள அணியமாயுள்ளேன் ..

— **முருகு வீரசாமி**, கந்தர்வக்கோட்டை.

**தங்கள் முயற்சி வெல்க!**

... தமிழின மேம்பாடு கருதிச் செய்யப்படும் தங்கள் முயற்சி வெல்க! — **மு. தமிழ்க்குடிமகன்**, க. மு. மதுரை-14.

**அமைப்புகளின் தொகையைப் பெருக்கத்தான் வேண்டும்!**

... ப(க்)த்தர்கள் கோயில்களின் தொகையைப் பெருக்குவது போல், தமிழர் நலன் நாடுகிற நாமும் அமைப்புகளின் தொகையைப் பெருக்கத்தான் வேண்டியுள்ளது ...

— **பர். சாலைஇளந்திரையன்**, புதுதில்லி-5.

**மிக்க மகிழ்ச்சி!**

... 'உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்' என்னும் பெயருடன் ஓர் இயக்கம் தொடங்கப் பெறுவதறிந்து மிக்க மகிழ்ச்சி!

— பாவலர். **சுரதா**, சென்னை-78.

**வெற்றியுடன் நிறைவேற வாழ்த்துகிறேன்!**

... தாங்கள் மேற்கொண்டுள்ள 'உலகத் தமிழின முன்னேற்றக் கழக' முயற்சி எல்லாம் வல்ல இறையாற்றலால் வெற்றியுடன் இனிதே நிறைவேற வாழ்த்துகிறேன். தாங்கள் எல்லா நலமும் பெற்று வாழ வேண்டுகின்றேன். —**அ. விசுவநாதன்**, சின்னசேலம்

www.thamizham.net - Free E book No 7513

(16-ஆம் பக்கத் தொடர்ச்சி)
கிறுன். இங்கே தமிழ் என்ன உயர்வு பெறுகிறது என்று தாங்கள் கருதுகிறீர்கள்? சைவ மதமே தமிழ்மதம். சைவம் வேறு; இந்து மதம் வேறு. இதனை மக்களுக்கு உணர்த்த வேண்டும்.

இறுதியாக ஒன்று! தமிழ் நாட்டில் தன்னலமற்ற பெரியோர் நடத்தும் ஓரிரண்டு இதழ்களில் 'தென்மொழி'யும் ஒன்று. இதில் சற்றே தவறுன கருத்துகள் வெளியிடப் படினும் அது பெரும் கலக்கத்தை உண்டு பண்ணும். ஆவன செய்வீர்கள் என்று எண்ணுகிறேன். — **இராச. நடராசன்,** இசல் கரஞ்சி, மகாராட்டிரம்

**0 866 :** அன்புடையீர் .. இந்த மாத இதழில் மீனுட்சிபுரம் மதமாற்றம் பற்றிய நீண்ட கட்டுரை வரைந்துள்ளீர்கள். அதில் இந்து மதம் அழியும் வரை இத்தகைய மதமாற்றங்கள் வரவேற்கப் பட வேண்டும் என்ற பொருள் பட எழுதியுள்ளீர்கள். ஆனுல் இந்து மதம் அழியும் போது தமிழும் அழிவதுபற்றித் தாங்கள் கருத்து ஏதும் கூறவில்லையே! ஏனென்ருல் மதம் மாறியவர்கள் தமது தமிழ்ப் பெயர்களையும் மாற்றிக் கொண்டு உருதுவிலோ அல்லது அரபி மொழியிலோ வேறுபெயர் சூடிக் கொண்டுள்ளார்கள். இது வரை தமிழில் கூறி வந்த இறை வழிபாட்டை இனி அரபு மொழியி லேயே கூறப் போகிருர்கள். இதற்காகக் கேரளத்தில் பொன்னுணி என்ற இடத்திலுள்ள இசுலாமிய சமயப் பரப்பு இயக்கத்திற்கு அரபு மொழிமற்றும் சமயப்பண்பாட்டுப் பயிற்சிபெறச் சென்றிருக்கிருர்கள். இவர்களை,அனைவரும் பின்பற்றுவது தமிழ் மொழி வளர்ச்சிக்கு உறு துணையாகும் என்று கூறுகிறீர்களா? தவிர, திருக்குறளைக் கூட குரானுக்குக் கீழான தொரு நூலாகவே அவர்கள் (தமிழைத்தாய் மொழியாகக் கொண்டிருந்தாலும் கூட) நினைக்கிருர்கள். இந்த நிலையில் மற்ற தமிழ் இலக்கியங்களை அவர்கள் எவ்வளவில் மதிக் கிருர்கள் என்று சொல்ல வேண்டுவதில்லை.

ஆகவேதான் பெரியார் கூட, மத மாற்றம் என்பது சாதியை ஒழிக்க நல்ல தீர்வாகாது என அறிஞர் அம்பேத்காரிடம் கூறியதை நீங்கள் அறிந்திருக்கலாமே! தவிர சாதி வேறுபாடற்ற சமயம் ஏன் 1971-வங்காள தேச விடுதலைப் போரில் தமது சமய மக்களையே ஒரு கோடிப் பேரை கொன்று குவித்தது? இந்து சமயத்தில் இந்துக் கள் இந்துக்களையே இந்த அளவு கொன்று குவித்ததில்லையே? நாட்டுரிமை பெற்ற பின்பும் வங்காள நாட்டில் ஒவ்வொரு முறையும் குடியரசுத் தலைவரோ, தலைமையமைச்சரோ சுட்டுக் கொல்லப்பட்டு, வன்முறையில்தான் ஆட்சி மாறியிருக்கிறதே தவிர குடியரசு முறை யில் தேர்தல் ஒழுங்காக நடைபெற்று ஆட்சி மாறவில்லையே! எந்த முசுலிம் நாட்டிலும் குடியரசு ஆட்சி நடக்க வில்லை என்பது உலகு அறிந்த உண்மையன்ருே? மேலும் இந்து சமயத்தை எதிர்த்துக் குரல் எழுப்ப இங்கு உரிமையிருக்கையில், அவர்கள் சமயத்தில் இப்படி ஏதேனும் குறைகளை எதிர்த்தால் நிலைமையே வேறு என்பது

www.thamizham.net - Free E book No 7513

தெரியுமன்றோ? 1974-இல் கோவையில் திராவிடர் கழக மாநாடு ஒன்று பெரியார் முதலாண்டு மறைவை யொட்டி நிகழ்ந்தபோது, இசுலாம் சமயக் குறைபாடுகளைப் பேசியதற்காக அவர்கள் திராவிடக் கழகத் தோழர்களைக் கடுமையாகத் தாக்கி, எழுவரை மருத்துவ நிலையத்துக்கு ஏதமான நிலையில் அனுப்பி வைத்ததோடல்லாமல் கூட்டம் நடந்த இடத்தையும் பொருட்காட்சியையுமே தகர்த்துத் தரைமட்டமாக்கியது அனைத்துச் செய்தித் தாள்களிலும் வெளி வந்திருந்ததே!

ஆகவே சாதிக் கொடுமை இருந்தால் தாழ்த்தப்பட்டோரை நமது தமிழ்ச் சமயத்துக்குக் கொண்டு வர நாம் முயற்சி செய்ய வேண்டுமே யன்றி, வேறு சமயங்களுக்கு நாமே அனுப்பி வைத்தால் பின்னொரு நாள் நாமும் அந்தச் சமயங்களுக்கு மாற வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகி, நமது பெயர் உட்பட உருதுவிலோ அரபு மொழியிலோ மாற்றிக் கொள்ள வேண்டி நேரிடும்.

— சித. வைரவன், சென்னை-17.

0 : 867 : பேரன்புப் பெருந்தகையீர்! தாங்கள், குடந்தை, கரூர் மாநாடுகளில் கலந்து கொண்டது பற்றி வருத்தப்படும் தென் மொழி அன்பர்களை மொழிப்பற்று மட்டும் கொண்டவர்கள், இம்மியும் இனப்பற்றில்லாதவர்கள், தென்மொழி இயக்கத்தின் கொள்கை-யையே புரியாதவர்கள், மொழித்தூய்மைத் தொண்டின் முகாமை யான நோக்கத்தை அறியாதவர்கள் என்றுதான் கருத வேண்டி யுள்ளது. மொழித் தொண்டின் நோக்கம் மொழியின் நலத்திற்கு மட்டும் அன்று. இன நலத்தையும் அடிப்படையாகக் கொண்டது தான். இனத்திற்காகத்தான் மொழியே தவிர மொழிக்காக இன மன்று. மொழி — வளர, வாழ, அதைப் பயன் படுத்த, இனம் வேண்டும். இனமில்லையேல் மொழிக்கு எந்தவகைப் பயனும் இல்லை. எனவே மொழி வாழ இனம் வேண்டும்; மொழி தனித்து வாழாது. வீழ்ந்த தமிழினம் வீறுபெற்று எழுந்து. தலை நிமிர்ந்து வாழ இன நல எழுச்சித் தொண்டும் தேவை. மொழி, இனத்தின் வீழ்ச்சிக்கும் தாழ்ச்சிக்கும் கரணியமான பார்ப்பன வல்லாண்மை எதிர்ப்புத் தொண்டும் தேவை.

ஆகவே. பார்ப்பன வல்லாண்மை ஒழிப்பு மாநாடுகளில் தாங்கள் கலந்துகொண்டது சரியானதும், தென்மொழிக் கொள்கைக்கு உடன் பாடானதும், ஓர் உண்மைத் தமிழ்ப் பேரறிஞரின் கடமையும் ஆகும். மேலும் திராவிடர் கழகமும் தென்மொழி இயக்கமும் தோழமை யோடு இணைந்து தொண்டாற்றுவதுதான் ஆரியத்திற்கு அச்சம் தருவதும், தமிழ்க் குமுகாயத்திற்கு வலிமை சேர்ப்பதும், நலம் பயப்பதுமான தொண்டும் ஆகும் என்பது எனது நீண்ட நாளைய ஆவல். அந்த ஆவலை அண்மையில் தீர்த்து வைத்ததுபற்றி தங்க ளுக்கு எனது உளங்கனிந்த நன்றி. வணக்கம். தங்கள் அன்புள்ள.

— பாவலர். கொ. செ. சின்னப்பனார், கொம்மக் கோவில்.

www.thamizham.net - Free E book No 7513

தாங்கள் கூறிய அறிவுரையின்படி நானும், என் துணைவியும் இனிதே, இல்லறம் நடத்துவோம் என்று உறுதி கூறுகிறோம். தங்களுக்கு என் குடும்பத்தினர் சார்பில் நன்றி கூறுகிறேன். வாழ்க நும் தமிழ்த் தொண்டு!

— அன்பன், மருத்துவர். அ. விசுவநாதன், சின்னசேலம்.

ப : 864 : பாவலரேறு, ஐயா அவர்களுக்கு, இந்து மதம் எனும் இழி மதம் ஒழிக! — தென்மொழி இதழின் முகப்பு மொழி நன்று. ஒழியட்டும் இந்து மதம். ஆயின், தாழ்த்தப்பட்டவர்கள், என்ற நிலையை விடுவித்துக் கொண்டு, அவர்கள், "எல்லாமாகிய அல்லாவை நோக்கி நகரத் தொடங்கி விட்டனர்" என்று கூறுகின்ற தங்கள் மன எழுச்சி எம் போன்றோர்க்கு மன அதிர்ச்சியைத் தந்து நிற்கிறதே, அறிவீர்களா, தாங்கள்? 'வேதமதம் என்னும் நச்சு விதையைச் சுற்றியுள்ள சதைப் பகுதியே இந்துமதம்' — ஏற்றுக் கொள்கிறோம். ஆனால், இந்து மதத்தின் இவ்விழிநிலை, இன்னொரு மதத்தின் தகைமையை உயர்த்தி விடுமாப்போல் தாங்கள் எழுதியிருப்பதைக் கண்டு நாங்கள் குழம்புகிறோம். ... பெண்களை இருட்டறையில் வைத்திருப்பது இசுலாம் மதம். அல்லாவின் அடியுறை மக்களில் பாதிப்பேர் — பெண்கள் — நிகரமை வாழ்வு மூச்சுக் காற்றை உள்வாங்கும் உரிமை மறுக்கப்பட்டவர்களாக வன்றோ உள்ளனர்? ... வள்ளுவத்துக்குப் புறம்பான ஒரு மதத்துக்கு மாறிச் செல்கின்ற தமிழர்களை வாழ்த்தி வழியனுப்புவதோ நம் வேலை?

... குன்றக்குடி அடிகளாருக்குத் "துணிவிருக்குமானால் சாதி வேறுபாடற்ற தமிழர் மதத்தை அவர் வேறு பிரித்துக்காட்டி, அதில் மதம் மாறியவர்களைச் சேரச் சொல்லி அழைப்பு விடுத்திருக்கலாம்" என்று அடிகளாரைச் சாடியிருக்கிறீர்களே ஏன் அந்தப் பணியை நாமே செய்யக் கூடாது? அப்படி ஒரு பணியைத் தாங்களோ அடிகளாரோ செய்திட முன்வந்திருந்தால், இன்றைய நிலையில், அப்பணித் திறன் விலை போயிராது. சாதிக் கொடுமையிலிருந்து விடுபடுதல் ஒன்றுதான் இசுலாம் மதத் தழுவலுக்குக் காரணியம் என்றால், அப்படி மாறிப் போகின்றவர்கள் சாதி வேறுபாடு பாராத புத்த மதத்திற்குப் போயிருக்கலாமே? ஏன் அவ்வாறு நிகழவில்லை? பொருளியல் வல்லாண்மை மிக்க இசுலாம் மதம் தம்மிடம் வருபவர்களுக்குக் குழுகாயப் பாதுகாப்பு அளிக்குமோ என்னவோ, பொருளியல் கவர்ச்சியைப் பெருமளவில் கொடுக்கும் திறம் வாய்ந்தது. இதனால்தான் நூற்றுக் கணக்காக, ஆயிரக்கணக்காக இசுலாம் மதத்துக்கு ஏகிய வண்ணம் உள்ளனர். இந்த உண்மை எல்லோருக்கும் தெரிந்த மறைவடக்கம். தமிழர்களுக்கு எம்மதமும் வேண்டியதில்லை. அல்லது, எம் மதமும் நமக்குச் சம்மதம் என்று இருந்துவிட்டுப் போகட்டும். இந்து மதத்தினின்றும் இசுலாம் மதத்துக்குத் தாவுகின்றவர்களை நாம் கண்டு கொள்ளத் தேவையில்லை. அரசியல் கட்சி ஒன்றிலிருந்து இன்னொரு கட்சிக்குத் தாவுகின்றவர்களுக்கும் இவர்களுக்கும் எவ்வகை வேறுபாடும் இருப்பதாகத் தெரியவில்லை.

"மதமும் சாதியும் மாய்ந்து போகட்டும்!
புதுமை அறிவியல் பூத்துக் குலுங்குக!
பொதுமை நிலவுக! புதுக்குக உலகையே!"

என்ற அளவில் நாம் அமைந்து கொள்வோம்; சாதி வேறுபாடற்ற, வள்ளுவத்தைப் பின்பற்றுகின்ற தமிழர் அணியை ஒருங்கிணைக்கப்

www.thamizham.net - Free E book No 7513

பாடாற்றுவோம். நமக்கு 'இந்து'வும் வேண்டாம்; 'ஏசு'வும் வேண்டாம்; எல்லாமாகிய, 'அல்லா'வும் வேண்டாம்.

இனி, தென்மொழியன்பர்களை இன்னொரு வகையிலும் தாங்கள் குழப்புதல் செய்வதாக உணர்கிறேன். திராவிடர் கழகம் நடத்துகின்ற மாநாடுகள் கூட்டங்களில் தாங்கள் கலந்து கொண்டு உரை நிகழ்த்துதல் தென்மொழி இயக்கத்துக்கு ஏற்புடையதாகத் தெரியவில்லை. தென்மொழி ஏற்றுக் கொண்டுள்ள மொழி, இன, நாடு பற்றிய மூன்று கொள்கைகளில் எந்தக் கொள்கையில் தி. க. தோள் கொடுக்கிறது? தனித்தமிழ், மற்றும் தமிழ் வளர்ச்சியைப் பொருத்த மட்டில், தி. க. நெடுந்தொலைவில் நிற்கிறது. அஃது ஆரியத்தை இகழ்வதாலேயே தமிழினத்துக்கு ஏற்றம் தந்ததாகி விடுமா? அதன் முழுமுதற் கொள்கையாகிய திராவிட நாட்டையும் புறந்தள்ளிவிட்டு இன்று பெயரளவில்தானே உள்ளது தி. க.? தனித்தமிழ் நாட்டு இயக்கத்துக்கும் அக்கழகத்துக்கும் எவ்வகைத் தொடர்பும் இல்லையே?

தி.க. மட்டுமல்லாமல், எந்த ஓர் இயக்கமும் இன நலம் பாராட்டி எழும்போது, நாம் அதற்குத் தோள் கொடுப்போம்; துணை நிற்போம்; ஆதரிப்போம் அதற்காக, அவர்களோடு அவர்களாக நாம் கலந்திடத் தேவையில்லையே. தி. க. வின் செயல்பாடுகளில் தங்களை இணைத்துக் கொள்வதைத், தென்மொழி அன்பர்களில் பெரும்பாலோர் விரும்பமாட்டார்கள் என்பதே உண்மைநிலை. குடந்தை முகவர் திரு. வை. குணசீலன் தொகுத்தனுப்பிய ஏற்புடைய கருத்துரைகள் தென்மொழியன்பர்களின் பொதுவான கருத்தாகக் கொள்வதற்கில்லை.

வெறுாஉம் ஆரவாரங்களுக்கும் அடாவடித்தனங்களுக்கும் அப்பாற்பட்டது தென்மொழி இயக்கம். இதன் நோக்கமோ இமயத்தின் மாணப் பெரிது. இதன் தலைவரோ மொழிஞாயிறு பாவாணரின் தலைமாணுக்கர்; நிறைமொழி நீரவர்; நிரந்தினிது சொல்லும் சொலல்வல்லார்; மாசறு காட்சியவர்; குணமென்னும் குன்றேறி நிற்பவர்; தனக்குவமை இல்லாதார். இத்தலைவரின் ஆற்றலும் அறிவும் ஒரு முகமாகத் தமிழர்க்கும் தமிழ் நாட்டுக்குமே பயன்பட வேண்டும். இதுதான் தென்மொழி அன்பர்களின் ஒட்டு மொத்தமான கருத்து; விருப்பம்; வேணவா. நன்றி பயவா வினைகளில் எமது அரிமாத் தலைவரின் ஆற்றல்களும் அறிவின் செறிவும் சிதறடிக்கப்படுவதை யாம் ஒரு நாளும் ஏற்கோம்.

எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு
கொள்ளாத கொள்ளாது உலகு.

வாழ்க தென்மொழி இயக்கம்!—க. கி. அகமுடை நம்பி, பொறி. இ.
(உதவிப்பொறியாளர்) அருப்புக் கோட்டை.

0 : 865 : பெருந்தகையீர், தங்களது சு : 17; ஒ : 12-இன் "மதம் பெரிதில்லை; மக்கள் நலமே பெரிது" என்ற தலைப்பிட்ட ஆசிரியவுரை மனத்துயரம் அளித்ததோடல்லாமல் "யானைக்கும் அடி சறுக்கும்' என்ற பழமொழியை மெய்ப்பிக்கும் வகையில் அமைவதாக உள்ளது. தங்களது, மொழி பற்றிய கருத்துகளில் நூற்றுக்கு நூறு உடன்பாடு கொண்டவன் நான். இந்து மதத்தை விட்டுத்

(தொடர்ச்சி 16-ஆம் பக்கம் பார்க்க)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. (தமிழகம்)
www.thamizham.net - Free E book No 7513